# திராவிடநாடு




மாஸ்டர் தாரா சிங்

2 அணா

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

புரட்சி—இதுதான் வரலாற்றின் முடிவு. பாட்டாளி வர்க்கத்தின் வழிப்பயணத்தின் இறுதிக் கட்டம்,

வரலாறுதான் தானே வளர்ச்சியடையுமே, ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டுமே, அதற்குள் ஏன் புரட்சி? கேட்கவேண்டிய கேள்வி.

அதற்கு மார்க்ஸ் தந்த பதில் சாதுர்யமானது. முழு வளர்ச்சியடைந்து பல காலத்திற்குப் பின் உளுத்துப்போன மரத்தை எத்தனை நாளைக்குத் தானே விழட்டும் என்று விட்டுவைத்திருப்பது? மரத்தை வெட்டி சாய்த்துவிட வேண்டுமல்லவா? அதுபோன்றே செல்லரித்த சமூகத்தில் கரையான் புற்றுகளை வாழவிடாமல், உதவாக்கரை சமூகம்தானே! அது தானே அழியட்டும் என்று காத்திராமல், தொழிலாளர் புரட்சிசெய்து புதிய சமுதாயத்தை நிறுவவேண்டும். இதுவரை தங்களைப் பறிமுதல் செய்து, சுகத்தில் வாழ்ந்தவர்களை இப்பொழுது பறிமுதல் செய்து, நீண்டநாட் கணக்கைத் தீர்த்துக் கட்டவேண்டியது தொழிலாளர்கள் புரட்சியின் மூலம்.

முதலாளிகளோ சிலர்; மற்றவர்களோ பலர். பலர் படைதிரட்டினால் சிலருடையகதி? முதலாளிகள் முறியடிக்கப்படுவார்கள்.

தொழிலாளர் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தி, பணக்காரர்களைப் பறிமுதல் செய்து புதிய ஆட்சியை நிறுவுவார்கள். பாட்டாளிகளின் சர்வாதிகாரம்-அடிமைகள் இதுவரை காணாத—அதற்காக இத்தனை நாள் ஏங்கிக்கிடந்த—பூலோக சொர்க்கம் ஆரம்பமாகும்.

ஆரம்பத்தில் ஆட்சி பயங்கரமாயிருககும். முதலாளிகளைப் பறிமுதல் செய்வது, பலாத்காரத்தால் அவர்களுடைய போராட்டங்களை அடக்குவது, சமத்துவத்தை நிலைநாட்டுவது, இதெல்லாம் அமைதியான சூழ்நிலையில் நடக்காது.

ஆனால், இந்த வேலை முடிந்து, எல்லோரும் சமமென்று ஆகிவிட்டால், ஆட்சிக்கு அவசியமில்லை. பொதுஉடைமை தோன்றிவிடும். அரசாங்கம், அதற்குதவ சட்டங்கள், அவைகளை நிலைநிறுத்த அடக்குமுறை — இவையெல்லாம் தேவைப்படாது. இலையுதிர் காலத்தில், மரத்திலிருந்து இலைகள் தாமாகவே விழுவதுபோல, இவைகளும் உதிர்ந்துவிடும்.

இந்தப் பொதுஉடைமைப் பூங்காவே தொழிலாள வர்க்கத்தின் மெக்கா—இறுதியாக சென்றடைய வேண்டிய இடம். இந்த இலட்சியத்தை நோக்கி நடக்கவேண்டும் பாட்டாளி வர்க்கம். அதற்கிடையே தோன்றும் இன்னல்கள், போராட்டங்கள், இரத்தக்களறி, கொலை, கொள்ளை எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளவேண்டும். அவை தவிர்க்கமுடியாதவை என்றார் மார்க்ஸ்.

இலட்சியத்தை அடைந்ததும் சமத்துவமான நிலை ஏற்படும். அந்தச் சமூகத்தில் வர்க்கப் போராட்டத்துக்கு இடம் இருக்காது. 'எல்லோருடைய முழு வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் முழு வளர்ச்சியடைய வேண்டியதவசியம்' என்ற அடிப்படையில் பாட்டாளிகளின் ஆட்சி ஏற்படும். அந்த ஆட்சியில்தான் ஒவ்வொருவனும் சக்திக்குத் தக உழைப்பான் — தன்னுடைய தேவைக்குத் தக்க ஊதியம் பெறுவான் — அவனவனுடைய உழைப்புக்குத்தக்க கூலி அல்ல, முதலாளித்துவத்தில் இருப்பதைப்போல. அதனால், அங்கு பசியும் பட்டினியும் இருக்காது, ஏற்றத் தாழ்வுகளைக் காணமுடியாது.

இவ்வளவு சிறந்த இலட்சியத்தை அடைவதற்கு எவ்விதமான புரட்சியும், பலாத்காரமும் தேவைப்பட்டால், கையாளுவதால் தவறில்லை என்றார், மார்க்ஸ்.

ஒரு பொருளின் விலை, அதைச் செய்வதற்கான உழைப்பைப் பொறுத்தது. ஆனால், அப்பொருளை விற்றதனால் வரும் பணத்தில் ஒரு சிறிய பகுதிதான் உழைப்பவனுக்குத் தரப்படுகிறது. பெரும் பகுதியை முதலாளி எடுத்துக் கொள்ளுகிறான். உழைத்தவன், முழு விலைக்கும் உரிமையுள்ளவன் ஏமாற்றப்படுகிறான். முதலாளி அவனை ஏமாற்றி அவனுடைய வாழ்க்கைச் செலவுக்கான கூலியை மட்டும் கொடுத்துவிட்டு, எஞ்சியதைச் சுரண்டிச் செல்வத்தைச் சேர்க்கிறான். இது உழைப்பவனுக்கும், உழைக்காது ஊதியம் பெறுபவனுக்குமிடையே திராப்பகையை உண்டாக்கும். இந்த வர்க்கப் போராட்டம் புரட்சியில்தான் முடிவடையும். மிகச் சிலரான முதலாளிக் கூட்டம் சின்னாபின்னமாக்கப்பட்டு பெருவாரியான பாட்டாளிகளின் ஆட்சி நிறுவப்படும். இதுவே மார்க்ஸியக் கொள்கை.

ஒரு பொருளின் விலைமதிப்பு அதற்குத் தேவையான உழைப்பைப் பொறுத்தது என்பதை ஒப்புக்கொண்டால், மார்க்ஸியக் கொள்கையின் முடிவுகளையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

உழைப்பு மட்டுமே ஒரு பொருளின் விலையை நிர்ணயித்த காலம் ஒன்று உண்டு. உலகில் எல்லா மூலப்பொருள்களும் ஏராளமாக இருந்தும் இலவசமாகக் கிடைத்த காலத்தில் ஒருவன் அவைகளைக் கொண்டு தன்னுடைய கையினாலேயே ஒரு சாமானைச் செய்தால், அந்தச் சாமானின் விலை அவனுடைய உழைப்பைப் பொறுத்தே இருந்திருக்கும். உதாரணமாக காட்டிலிருந்து மரத்தைக்கொண்டு வந்து ஒருவன் தன் வீட்டிலேயே அதை மேசை, அல்லது நாற்காலியாகச் செய்து விற்றால் அந்தப் பொருளுக்குத் தரப்படும் விலை அவனது உழைப்புக்குத் தரப்படும் ஊதியம் எனலாம். மரம் அவனுக்கு இலவசமாகக் கிடைத்து அவனுடைய சொந்த உழைப்பினால் உருவான பொருளுக்கு அவ்விதம் விலை நிர்ணயிப்பது சரி.

இக்காலத்தில் மேசை நாற்காலிகள் செய்யும் தொழிற்சாலையில் ஒருவன் வேலை பார்க்கிறான் என்றால் அவன் ஒரு நாளைக்கு நான்கு மேசைகள் செய்கிறான். அந்த நான்கு மேசைகளின் விலைத் தொகையும் அந்தத் தொழிலாளியின் உழைப்புக்கு ஊதியமாக தரப்படவேண்டும் என்று சொன்னால் எப்படிப் பொருந்தும்? மேசை செய்

யத்தேவையான மரம் தொழிலாளி யுடையதல்ல. அந்தத் தொழிற் சாலை முதலாளியும் இலவசமாக இக்காலத்தில் மரத்தைப் பெற்றிருக்க முடியாது. ஆக அதற்கு முதலாளி விலைகொடுத்து வாங்கியிருக்க வேண்டும். மேலும் அந்தத் தொழிலாளி தன்னுடைய கையாலேயே மட்டும் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தால் அவனால் நான்கு மேசைகள் ஒரு நாளில் செய்து முடித்திருக்கவே முடியாது. முதலாளியால் வாங்கப்பட்டு தொழிற்சாலையில் அமைக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களின் உதவியால்தான் அவன் அவ்வளவு உற்பத்திசெய்ய முடிகிறது. ஆக அவனுடைய உற்பத்தியின் விலை முழுவதும் அவனுடைய உழைப்பினால் மட்டும்தான் ஏற்படுகிறது என்று எப்படிச் சொல்லமுடியும்.

எனவே இக்காலத்தில் ஒரு பொருளைச் செய்யவேண்டுமானால், அதற்குத் தேவையான மூலப் பொருள் விலைக்கு வாங்கியாக வேண்டும். வேலை துரிதமாகச் செய்வதற்கு இயந்திரம் வாங்கி அமைக்கவேண்டும். சாமான்களை அதன் உதவியால் செய்யும் பொழுது அதற்கு தேய்வு, அழிவு ஏற்படும். மேலும் இந்த இயந்திரங்களை அமைத்து தொழிலாளி வேலை செய்வதற்கு ஏதுவாக ஒரு தொழிற்சாலைக் கட்டடம் அவசியமாகிறது. அதற்கு வாடகை கொடுத்தாகவேண்டும். தொழிற்சாலையில் உற்பத்தியாகும்பொருளை அங்கேயே வைத்திருந்தால் விலையாகாது. எனவே அதை மக்கள் வாங்குவதற்கு ஏதுவான சந்தைகளில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும், அதற்குப் போக்குவரத்துச் செலவுகள் ஏற்படும். ஆக அந்தப் பொருள் கடைசியாக வாங்குபவர் கையில் சேர்த்து அதற்கு அவர் விலைகொடுக்கும் பொழுது அந்த விலையில் தொழிலாளியின் உழைப்புக்கு ஊதியம் மட்டுமல்ல, மற்றும் இன்னும் மேலே சொல்லப்பட்ட செலவுத் தொகைகளும் சேர்ந்திருக்கின்றன. இவை அத்தனையும் சேர்ந்துதான் உற்பத்திச் செலவு ஆகிறது.

ஒரு பொருளை விற்றுவரும் தொகையிலிருந்து அந்தப்பொருளை உற்பத்தி செய்வதற்கான அவ்வளவு செலவுகளையும் ஈடு செய்வதே முறையே யன்றி, விலைத் தொகை முழுவதும் தொழிலாளிக்குத்தான் சேரவேண்டும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இன்னும் ஆராய்ந்தால் ஒரு பொருளின் உற்பத்திச் செலவுதான் அதன் விலையை நிர்ணயிக்கும் என்று சொல்லுவது கூட அவ்வளவு சரியானதல்ல. ஒருவன் ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு சாமானைசெய்து வைத்துக்கொண்டு அதன் உற்பத்திச் செலவு இவ்வளவு என்று சொல்லிக்கொண்டு அதற்கு விலை ஆயிரம் என்று நிர்ணயித்தாலும், அந்த சாமான் எவருக்கும் உபயோகமில்லாத காரணத்தால் யாரும் விரும்பி அதைக்கேட்க முன்வராமல் விலையாகவில்லை என்றால் அல்லது அப்படியே யார் கேட்டாலும் நூறு ரூபாய்க்கு மேல் அதற்குக் கொடுப்பதற்கு தயாராக இல்லையென்றால் என்ன அர்த்தம்? ஒன்று அந்த பொருள் விற்பனையாகாது அல்லது அப்படியே யானாலும் அதற்கு நூறு ரூபாய்க்குமேல் கிடைக்காது என்பதுதான் பொருள். ஆக உற்பத்திச் செலவு மட்டும் எப்படி அதன் விலையை நிர்ணயிக்கமுடியும்.

உற்பத்திச் செலவு ஒருபுறமிருக்க, அந்தச் சாமானின்மேல் மக்களுக்கு நாட்டம் இருக்கவேண்டும். நாட்டம் அதிகமாக இருந்தால், வாங்குபவர்களுக்குள்ளே போட்டி ஏற்பட்டு அதனால் அந்தப் பொருளின் விலை உற்பத்திச் செலவிற்கு மேலேயே ஏறிவிடலாம். யாருக்கும் அந்தச் சாமான் தேவையின்றி, அதனால் நாட்டமில்லாமற்போனால், உற்பத்திச் செலவைச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

ஆகவே, ஒரு பொருளின் விலை மதிப்பு, அதன் உழைப்பைப் பொறுத்ததே என்ற மார்க்ஸீய வாதம் இக்காலத்தில் சரியானதல்ல. உழைப்போடு கூடிய மற்ற உற்பத்திச் செலவுகள் ஒருபுறமும், மக்கள் தேவையும் நாட்டமும் மற்றொருபுறமுமாக இரண்டையும் பொறுத்தே இருக்கும் ஒரு பொருளின் விலை.

இதிலிருந்து மார்க்ஸிய வாதத்தின் அடிப்படைக் கொள்கையே தவறென்றாகிறது. எனவே, அதன் முடிவுகளும் அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவையல்ல.

மார்க்ஸ் வாழ்ந்த காலம் தொழிற் புரட்சி தோன்றிய காலம். தொழிற்சாலைகளில் தொழிலாளரிடம் அதிகமான வேலை வாங்கப்பட்டது. கூலி குறைத்துக் கொடுக்கப்பட்டது. இதைப்பற்றி அரசாங்கம் கவலைப்படவேயில்லை. ஆலைச் சட்டங்கள் இயற்றிக் கூலியை உயர்த்துவது, உழைக்கும் நேரத்தைக் குறைப்பது என்பதெல்லாம் தனி மனிதனின் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துவதாகும் என்று அரசாங்கம் அக்காலத்தில் நம்பி வந்தது. தொழிலாளிகள் தங்களுக்குள்ளே சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டு முயற்சியால் தங்களுடைய நிலையைச் சீர்படுத்த எடுத்த முயற்சிகளையும் அரசாங்கம் தடை செய்தது. ஏனெனில் அந்த அரசாங்கம் தொழிலதிபர்கள்முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. பாட்டாளிகளுக்கு ஓட்டுரிமை இல்லாத காலம் அது. அவர்களுடைய பிரதிநிதிகள் பார்லிமெண்ட் மக்கள் சபையில் இடம்பெறாத காலம்.

அக்காலத்தில் தொழிலாளியின் உழைப்பின் அவசியத்தையும், அவ்வளவு அவசியமான உழைப்புக்குப் போதிய ஊதியம் தரப்படவில்லை என்பதையும் உணர்ந்து மார்க்ஸ் தனது கொள்கையை வெளியிட்டார். உற்பத்திச் செலவில் முதலிடத்தை உழைப்புக்குத் தருவதைப்பற்றி யாரும் குறைசொல்ல முடியாது. ஆனால் அதற்கே முழு இடத்தையும் கொடுக்கும்படி சொல்லுவதே ஏற்றுக்கொள்ள முடியாது.

(தொடரும்)

**முகப்பில்.......**

எவ்வளவுதான் பத்திரிகைகள் இருட்டடைப்புச் செய்த போதிலும், உண்மையாகவும் நேர்மையாகவும் அவசியமென்று கருதியும் நடத்தப்படும் கிளர்ச்சிகளை உலகம் அறியத்தான் செய்கிறது. ஏக இந்தியாக்காரர்களின் அடக்குமுறைக்கு ஆளாகி இதுவரை இரண்டாயிரம் பேருக்கு மேல் சிறை புகுந்துள்ளனர்—பஞ்சாபில்! சீக்கிஸ்தான் கோரி மாஸ்டர் தாராசிங் இந்தக் கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்துகிறார். அவரையும் டில்லி சர்க்கார் இப்போது சிறையில் தள்ளியிருக்கிறது.

# இனமணி ஒலிக்கட்டும்!

மாதா மானமழிந்து நிற்கிறுள், மகனே! நீ மல்லிகை சூடிடும் மயக்குமொழியாளின் சேலையைத் துவைத்துப் போட்டுக்கொண்டிருக்கிருயே, தகுமா, நியாயமா! உன் உள்ளத்திலே ஒரு கடுகளவு அன்பும் சுரக்கவில்லையா! உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்று, ஈ எறும்பு மொய்க்காமல் பாதுகாத்து. பாலூட்டிச் சீராட்டி, உன் நோய் போகத் தான் மருந்துண்டு, நீ தூங்குவதற்காகத்தான் விழித்திருந்து, உன் எச்சல் கலந்த சோற்றை தேவாமிர்தம் என்று உண்டு, உன் குறுகுறு நடை கண்டு குதூகலித்த தாயப்பா, உன் அன்னை, முன்னறி தெய்வம், அந்தத் தாய் அலங்கோலமாகக் கிடக்கிருள், நீகண்வெட்டுக்காரிக்கு 'கூஜா' தூக்கி வாழ்க்கை நடத்துகிருய், சேச்சே! என்ன போக்கு இது! ஆண்டவன் சகித்துக் கொள்வாரா இந்த அக்கிரமத்தை! இந்த துரோகம், நரகத்திலே, பாம்பாகித் தேளாகி, மலக்குழியாகி, நெருப்புக் குண்டமாகி, வேதனை தரும். வேண்டாமப்பா இந்த விபரீதமோகம்! ஆகாதப்பா அந்த அனியாயம்! கூடாதப்பா இந்தக் கேடான போக்கு!"

*

மரக்கிளையிலே பிணம்! மாரடித்தழுகிருள் அவன் மனையாட்டி! கோவென்று கதறுகின்றன குழந்தைகள்! கூடி நிற்கும் கும்பல் கண்ணீர் வடிக்கிறது!! இதைக் கண்டாயே, உன் மனம் புழுப்போலத் துடிக்கவில்லையா? உன் கண்ணெதிரே நடக்கும் இந்தக் கோரக் காட்சி, உன் இதயத்தைத் துளைக்கவில்லையா? உழைத்து, மானத்தோடு, கூழானுலும் குளித்துக்குடி, கந்தையானுலும் கசக்கிக் கட்டு, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற முதுமொழிகளை வாழ்க்கைக்கு வழியாகக்கொண்டு, வாழ்ந்த குடும்பம், இதோ, சுழலில் சிக்கிய கலம் சுக்குநூருவது போலாகிவிட்டது! மரக்கிளையிலே தொங்கும் பிணம், நீண்டநாட்களாக நாட்டிலே நடைப்பிணமாக இருந்துவந்தது; நாதியில்லை; வாழ வழியில்லை; உழைக்கத் தெரியும், வேலை தருவாரில்லை; ஊரை ஏய்க்கத்தெரியாது, இதோ பிணமாஞன்! அவன் பெற்ற செல்வங்கள் அதோ—பச்சைக் கொடிகள், வாடி வதங்கிக் கிடக்கின்றன! அவன் மனைவி அதோ, 'ஐயோ' என்கிருள், அடியற்ற நெடும்பனை போல கீழே வீழ்கிருள்! இந்தக் குடும்பம் ஏன் இந்தக் கதிக்கு வந்தது தெரியுமா! இந்தக் குடும்பத்தைச் சித்திரவதை செய்த கொலைபாதகன் யார் தெரியுமா? ஈவு இரக்கமற்ற அந்த அரக்கன் யார் தெரியுமா! நீ தான்! ஆமாம் நீயேதான்! ஆத்திரப்பட்டுப் பயன் என்ன, ஆமதாபாத் வேட்டியல்லவா கட்டிக் கொண்டிருக்கிருய், அறிவிலி! நீ அதைக்கட்டப்போய்த் தான், இதோ மரக்கிளையிலே பிணம், மாரடித்து அழும் மனைவி!! என்னப்பா, கண்களை உருட்டுகிருய்! இவன் நெசவாளி! கைத்தறித் தொழிலில் மூன்று தலைமுறைகளாக ஈடுபட்டிருக்கும் குடும்பத்தினன்! இவன் நெய்து கொண்டிருப்பான், இந்த நேரிழையாள், நெசவுத் தொழிலுக்கான துணைச் செயல்களில் ஈடுபடுவாள், இந்தப் பிஞ்சுகள்கூட ஏதேனும் வேலை செய்த வண்ணம் இருந்தன! அழகான வேட்டிகள்! சீரான கரை! செம்மையான நெசவு! அழுத்தமான நெசவு! நீ என்ன செய்தாய் ஐயனே! என்ன செய்தாய்? ஆமதாபாத் வேட்டிக்கு அலைந்து திரிந்தாய்! இதோ இவன் பிணமாஞன்! சாகடித்தாய் இவனை; சல்லாத் துணி போன்ற வடநாட்டு மில் வேட்டியை வாங்கி, இவன் பிழைப்பை நாசமாக்கிஞய், குடும்பத்தைச் சிதைத்தாய், இதோமரக்கிளையிலேபிணம்! அவன் கழுத்தை இறுக்கிக்கொண்டிருக்கும் கயிரு அவன் உயிரைக் குடித்தது இல்லை— இல்லை— நீ! குடித்தாய் — நீ சாகடித்தாய்!

*

இதுபோல மனம்உருக இருதயத்தைத்தொடத்தக்க வகையில் உங்களுக்குப் பேசத்தெரியுமா! தெரிந்தால் உடனே 'தினமணி'க்குத் தெரியப்படுத்துங்கள். இப்படி எல்லாம் பேசக்கூடியவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது தினமணி — வேலை நிரம்ப இருக்கிறதாம் இப்படிப் பேசக்கூடியவர்களுக்கு.

*

மில் வேட்டிகட்டி இருப்பவன் வீதியில் நடந்தால், காரித்துப்புங்கள் அவன் முகத்தில்! ஏ! நாட்டுப் பற்றற்ற சோற்றுத் துருத்தியே, உன் உடலை மறைக்க உன் நாட்டிலே ஆடையில்லையா, என்று கேளுங்கள்! இந்த நாட்டுப் பொருள்களை வடநாட்டுக்குக் கொட்டி அழுதுகொண்டிருக்கும் கோணற்புத்தி உன்னை விட்டுப் போகாதா? என்று கேளுங்கள்! குடிசைகளில் குமுறிச் சாகிருன் உன் நாட்டு நெசவாளி, வள்ளுவர் வழிவந்தோன், உன் பாட்டன் முப்பாட்டன் காலமுதற்கொண்டு மானங் காத்துவந்தோன், அவன் வதைபடுகிருன், வேலையின்றி, நீ பானைவயிறைச் சுமக்க முடியாமற் சுமந்து திரியும் சேட்டுக்குப் பாத காணிக்கை செலுத்துகிருய், அவனுடைய சாடீன், டபேடா, லினன், பிண்ட்லே, இவைகளுக்குப் பணத்தைக் கொட்டித் தருகிருய் உன்னிலும் மாபாவி வேறு உண்டா? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிருய்! களவாட வந்தவனுக்கு பெண்டாள வழிசெய்து தரும் கயவனிலும் கொடியவன் நீ! கிழித்தெறி, நமது நாட்டை நாசமாக்கும் அந்தச் சைத்தான் துணியை! போர் போராகப் போட்டுத் தீ மூட்டு, பல இலட்சம் நெசவாளர்களின் வயிற்றிலே பசித் தீயை மூட்டிவிடப் பயன்பட்ட, பாழான மில் துணிகளுக்கு!—என்று கூறுங்கள். வீதியில், ஆணே பெண்ணே,

குழந்தையோ கிழமோ, மில் ஆடை அணிந்து சென்ருல், துரோகிகள் என்று முழக்கமிடுங்கள்! கலியாண வீடுகளில், கடைவீதிகளில், தேவாலயங்களில், பூந்தோட்டங்களில் அலுவலகங்களில் எங்கு கண்டாலும், துரத்துங்கள் அத்தகைய துரோகிகளை — தூக்கிலிட்டாலும் தவறில்லை அத்தகையவர்களை என்று கூறுங்கள். புத்தி புகட்டுங்கள்! மானம் பிறக்கச் செய்யுங்கள்! எதற்கும் அஞ்சாது இப்பணியாற்றிட வாரீர்! பட்டினிகிடக்கும் பல இலட்சம் நெசவாளர்கள் அழைக்கின்றனர்! அவர்கள் சிந்திடும் கண்ணீர் அழைக்கிறது! வாரீர்! வாரீர்! அவர் துயர் துடைப்போம்; பகை முடிப்போம்! அஞ்சேல்! வெற்றி நமதே!!

*

இப்படி வீராவேசமாகப் பேசத் தெரிந்தவர்களும் தேவைதானும் —தினமணி தெரிவிக்கிறது.

தினமணியா? கோயங்காவின் கோகிலமா? என்று ஆச்சரியத்துடன் கேட்கிறீர்களா—ஆமய்யா ஆம்!—தினமணியேதான்!

கடுமையான பிரசாரம்

தீவிரமான பிரசாரம்

வெறி பிடித்தது போன்ற பிரசாரம்

இருதயத்தைத் தொடும் வகையான பிரசாரம்

பிரசாரத் தாக்குதல்

வேண்டும்! வேண்டும்! பெரிய அளவில் வேண்டும், என்று தீட்டுகிறது.

சர்க்கார் திட்டங்கள் தீட்டலாம், ஆனால் அவை வெற்றிபெற வேண்டுமல்லவா—அந்த வெற்றி கிட்டாதது வேதனையையும் வெட்கத்தையும் கிளறிவிட்டிருக்கிறது தினமணிக்கு. குறிப்பாகக்கைத்தறி நெசவாளர்களின் குறையினைக் களைய முடியாமலிருப்பது கண்டு வெட்கமும், துக்கமும், திகைப்பும் கிளம்புகிறது. எனவே, இனித் தக்கதோர் பிரச்சாரத் தாக்குதல் மூலமே வெற்றிக்கான வழிகாண முடியும் என்று 'ஞானோதயம்' ஏற்படுகிறது, தலையங்கம் வருகிறது. கைத்தறியாளர்களின் கஷ்டத்தையும் அவர்களின் அருமையான ஆடைகளை வாங்காததால் நாட்டுக்கு ஏற்படும் பெரு நஷ்டத்தையும் எடுத்துக்காட்டி, எல்லோரும், அதிலும் குறிப்பாக நடுத்தர வகுப்பினர், கைத்தறி ஆடைகளை ஆதரிக்கும் விதமான ஆர்வத்தை ஊட்டவேண்டும் என்று கூறுகிறது.

காஞ்சிபுரம், கொரநாடு சேலைகளை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் கிரேப் சில்க், ஜார்ஜெட் சில்க், என்று தேட ஆரம்பித்துவிட்டார்கள். நாலு முழம் வேஷ்டிக்குக்கூட 'லினன் வேஷ்டி' கிடைக்கிறதா என்று பார்க்கிருர்கள்.

திட்டங்கள் வகுக்கவேண்டியதுதான்.



ஆனால் அவற்றில் வெற்றி பெறவேண்டுமானால் மத்யதர வகுப்பினரின் நாகரிக மோகத்தைச் சரியான பாதையில் திருப்புவதற்கு **கடுமையான பிரச்சாரம்** செய்யவேண்டியது முதல் காரியமாகும். இல்லாவிடில் காகிதத்தில்தான் திட்டத்தின் வெற்றி இருக்கும்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு கதர், சுதேசிக்காக எவ்வளவு தீவிர **மான பிரசாரம்** செய்யப்பட்டதோ அதேமாதிரி பிரம்மாண்டமான அளவில் இப்போது **பிரச்சாரத் தாக்குதலை** ஆரம்பிக்கவேண்டும். **வெறி பிடித்ததுபோன்ற பிரச்சாரம்** செய்தால்கூடப் பரவாயில்லை.

ஜனங்களின் **ஹிருதயத்தைத் தொடும்படியாக** நிலைமையை விளக்கிச் சொல்லவேண்டும்.

*

*தினமணி தலையங்கத்தில் ஒரு பகுதி மேலே தரப்பட்டிருப்பது. தீவிரப்பிரசாரம், கடுமையான பிரசாரம், இதயத்தைத் தொடக்கூடிய வகையான பிரசாரம், வேண்டுமாம், வெறி பிடித்ததுபோன்ற பிரசாரம் செய்தால்கூடப் பரவாயில்லையாம்!*

*

வைரக் கடுக்கனணிந்த வட்டிக் கடை வரதப்ப செட்டியார், சபை நடுவே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்—சிரக்கம்பம் செய்கிறார், முக பாவம் காட்டுகிறார், வித்வான் இதைக்கண்டு மிகத் திறமையுடன் பாடுகிறார். கல்யாணி இராகத்தை விஸ்தாரமாக ஆலாபனம் செய்துவிட்டு, கீர்த்தனை துவக்கி அருமையாகப் பாடி முடித்துவிட்டு, சூடான பால் சிறிதளவு அருந்திவிட்டு, ஒரு கிராம்பு கிள்ளி வாயில் போட்டுக் குதப்பியபடி, வித்வான், சிரக்கம்பம் செய்யும் சீமானை நோக்கி, மிக்க மரியாதையுடன், தாங்கள் விரும்பும் பாட்டுப்பாடச் சித்தமாக இருக்கிறேன், என்ன பாடச் சொல்கிறீர்கள் என்று கேட்க, அந்தச் சீமான், சபையிலே வேறு யாருக்கும் கிடைக்காத 'கௌரவம்' தனக்கு அளிக்கப்பட்டதை எண்ணிப் பெருமைப்பட்டவண்ணம், வித்வானைப் பார்த்து, "அபாரமாகத்தான் பாடுகிறீர்கள், என்றாலும், கொஞ்ச நேரம் கல்யாணி ராக ஆலாபனம் செய்தால், கேட்கலாம்—தங்களிடம் கல்யாணி ராகம் கேட்க வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாட்களாக ஆவல்" என்று சொன்னால், வித்வான் என்ன நிலையாவார்! சபையினரில் சங்கீதம் தெரிந்தோர் என்ன செய்வர்! அவரோ அபூர்வமான முறையில், கல்யாணி ஆலாபனம்செய்து முடித்தார் அப்போது தான், இந்தச் சீமானோ, ஏதேதோ பாடுகிறீர்கள் இப்போது கொஞ்ச நேரம் கல்யாணி ராக ஆலாபனம் செய்யுங்கள் என்கிறார்—அவ்வளவு 'ஞான சூன்யர்' அந்தச் சீமான்!

கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்க, கடந்த மூன்றாண்டுக் காலமாக, நாம் பிரச்சாரத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறோம். எந்த அரசியல் கட்சியும் கவனிக்க முன்வரத் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தி. மு.க. கைத்தறியாளர் சார்பாக வாதாடுவதற்கு முன் வந்தது. 'கைத்தறி வாரம்' கொண்டாடினோம்! மாநாடுகளில் பொதுக்கூட்டங்களில், கைத்தறியாளர் துயர் துடைக்க துரைத்தனத்தார் இன்னின்ன வகையான திட்டம் தீட்டிப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டினோம், தலையில் துணி மூட்டைகளைச் சுமந்துகொண்டு நமது கழகத் தோழர்கள் ஊரூராகச் சென்று கைத்தறியாடை விற்றனர்!

கல்யாணி ராக ஆலாபனை கனகச்சிதமாக நடந்துகொண்டிருந்த போது, காதடைத்துக் கிடந்த தினமணி, இப்போது சிறிதளவு கல்யாணி பாடச் சொல்லுகிறது!

வெறி பிடித்ததுபோன்ற பிரசாரமாக இருந்தாலும் பரவாயில்லையாம்!

தி. மு. க. வெறி பிடித்தது போன்ற முறையிலல்ல, எழுச்சியூட்டத்தக்க வகையில், பிரச்சாரம் நடத்தியபோது தினமணி ஆதரவு காட்டிற்றா, பாராட்டுதல் உண்டா, ஓஹோ! அதற்குப் பெருந்தன்மை பெரிய அளவில் வேண்டும்; பாராட்டுதல் வேண்டாம், செய்தியையாவது வெளியிட்டு, ஊக்கமளித்ததுண்டா! ஒரு சிறு புன்னகை, ஒரு கனிவான பார்வை, அன்பான வார்த்தை கிடைத்ததா! இல்லை, இல்லை!

வீண் வேலை என்றும், வேலை வெட்டி இல்லாதாரின் கூக்குரல் என்றும், கூறிடத்தான் முடிந்தது—அப்போது. இப்போது? பிரசாரம் வேண்டுமாம், பெரிய அளவில்!!

அந்தஸ்து குறைந்துவிடும் என்று அஞ்சி, போலிக் கௌரவத்துக்காகப் பயந்து, மற்ற அரசியல் கட்சிகள், மூட்டை சுமக்க முன்வரவில்லை. மந்த நிலையைப் போக்கவும், சொந்த நாட்டவரின் சோகத்தைப் போக்கவும், நாம் சுமந்தோம் துணிமூட்டைகளை! துரைமார்கள் போல அப்போது கிடந்த ஆடைகள், இப்போது துள்ளி எழுகின்றன. உடுமலை நாராயணக் கவியின் ஒப்பற்ற கீதம் முழங்காத ஊரில்லை; அதற்குமுன்பு வரையில் பாடி அறியாதவரெல்லாம்கூட, அன்று பாடினர் — பேரூர்களிலும் சிற்றூர்களிலும் உணர்ச்சி வெள்ளம் பாய்ந்தது; ஆடவரும் பெண்டிரும் அணிவகுத்து நின்று, ஆடை வாங்கினர்—முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதிபோல, கைத்தறியாளர் முகம் மலர்ந்தது! நம்மைக் கவனிக்க ஒரு இயக்கம் இருக்கிறது, நமது கஷ்ட நஷ்டத்தை எடுத்துக் கூற ஆதரவாளர் உள்ளனர் என்று பெருமிதத்துடன் கூறினர். அவர்களின் குறை அத்தனையும் அன்றோடு ஒழிந்தே போய்விட்டது என்பதல்ல, அவர்களின் குறையைக் களைந்தாகவேண்டியதைத் தமது தலையாய கடமையாகக் கொண்டிட, எல்லா அரசியல் கட்சிகளும் முன்வரத் தொடங்கின. அந்த ஆதரவு திரட்டும் அரும்பணியாற்றியகாலை, தினமணி என்ன செய்துகொண்டிருந்தது? இன்று, தீவிரமான பிரசாரம் வேண்டும் என்கிறது.

போகட்டும் — சிறுமைக் குணம். இனியேனும், தினமணி, குறிப்பிடும் வகையான பிரசாரம் நடைபெற்றால் ஆதரவு தருமா?

**வடநாட்டு ஆலைத் துணிகளை வாங்காதீர்.**

**வடநாட்டு ஆலைத் துணிகளைக் கொளுத்துங்கள்.**

**வடநாட்டு ஆலைத்துணிகளை அணிவோரைக் கண்டித்து ஆங்காங்கு கிளர்ச்சி செய்யவேண்டும்.**

என்று இவ்விதமான பிரச்சாரம் நம்மால் நடத்தப்பட்டால், 'சகித்துக் கொள்ளும்' போக்காவது ஏற்படுமா தினமணிக்கு? சந்தேகம் தான்!!

கைத்தறியாளர் சார்பாகத்தானும் ஏதோ 'கைங்கரியம்' செய்ததாகக் காட்டிக்கொள்ளும அளவுக்குத்தான் தலையங்கம் பயன்படுமே தவிர, உண்மையிலேயே, கைத்தறி நெசவாளர் குறை நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகளிலே நம் போன்றோர் ஈடுபட முன்வந்தால், தினமணிகளுக்குத் திகிலும் கசப்பும் தான் ஏற்படும்—ஆதரவு காட்டும் பண்பு இருக்காது—நிச்சயமாக.

கைத்தறியாளரின் கஷ்டம் தீர, ஆச்சாரியார் வலியுறுத்தி, சட்ட சபையில் எல்லாக் கட்சியினராலும் ஒருமனதாக ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இருக்கிறது—கைத்தறி ஆடைகளுடன், இன்னின்ன ரக ஆடைகளுடன் மில் ஆடைகள் போட்டியிட அனுமதிக்கக் கூடாது, என்ற தீர்மானம்.

அந்தத் தீர்மானத்தை டில்லி, குப்பை என்று கூறிவிட்டது.

ஆச்சாரியார், கெஞ்சினார், கண்டித்தார், ஒன்றுக்கும் டில்லி அசையவில்லை.

தினமணி என்ன செய்தது! ஆச்சாரியாரின் அந்தத் திட்டத்தை, அநாதைக் குழந்தைபோலாக்கி விட்டதே தவிர, வேறென்ன செய்யமுடிந்தது.

ஏன், வடநாட்டுச் சர்க்காரின் வக்கிரபுத்தியைக் கண்டிக்கவில்லை.

ஏன், டில்லியின் போக்கை மாற்றும் வகையிலே நாட்டிலே பெருங் கிளர்ச்சி எழவேண்டுமென்று கூறி அதற்கானவை செய்யவில்லை.

டில்லியின் எதேச்சாதிகாரப் போக்கையும், தென்னகத்துக் கைத்தறியாளர் பிரச்சினையைக் கவனிக்க மறுக்கும் அலட்சிய புத்தியையும் கண்டிக்கும் அறிகுறியாக, நமது 'ராஜ்ய' மந்திரிகள் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தவில்லை, அறிவுறுத்தவில்லை!

நேர்மையும் நெஞ்சுரமும் இருந்தால், வெறிபிடித்தது போன்ற பிரசாரம் செய்யத் தேவையில்லையே, இந்தக் காரியத்தைச் செய்தால் போதுமே—டில்லியின் அகம்பாவம் ஓரளவுக்காவது அழிந்து படுமே! யார் கவனித்தனர்!

போகட்டும், இப்போதாவது, போதி விருட்சத்தினடியில் அமர்ந்தெழுந்த நிலையிலாவது, தினமணி, இந்த முறையில் பணியாற்றத் துணியுமா?

ஊருருக்கும் வடநாட்டுத் துணிகள் பகிஷ்காரம் — கண்டனக் குறியாக வடநாட்டுத் துணிகளைக் கொளுத்துவது—ஒருகாலம் குறிப்பிட்டு, அதற்குள், டில்லி தன் பிடிவாதப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்; இல்லையேல், நமது 'ராஜ்ய' மந்திரிகள், ராஜிநாமாச்

(12-ம் பக்கம் பார்க்க)

# பிரியாணி குர்மா!

சர்மா:—வாடாப்பா, கழகம்! என்ன சமாசாரம், உன்னோட தலைவா ளெல்லாம் எந்தத் தேசம் போயிருக்கா, என்ன விசேஷம்...'

சேரன்:—"என்ன ஐயரே! பேச்சு ஒரு தினுசா இருக்கு..."

சர்மா:—"தப்பா எடுத்துண்டுடா தேடாப்பா. ஒவ்வொரு கட்சியிலுள்ள தலைவர்களும்பலதேசம் போய் வர்ராளே, உங்க கழகத் தலைவாள் போகலையோன்னு கேட்டேன்."

சேரன்:—"போகல்லே......அவாளுக்கு இங்கே நிறைய வேலை இருக்கு."

சர்மா:—அதுகிடக்கட்டும், ஜவார்லாலுக்குப் பார்த்தயோ, எவ்வளவு ஜாம்ஜாம்னு, வரவேற்பு, வைபவம், ரஷியாவிலே..."

சேரன்:—"ஆமாம்...பத்தி பத்தியா வருதே..."

சர்மா:—"பக்கம்பக்கமாப் போட்டாலும் படிக்கப் பிரம்மானந்தமா இருக்கு ...இல்லையா..."

சேரன்:—"ஆமாம்..."

சர்மா:—"மலரை வாரி வாரித்தூவினுளாம். தேவர்கள் பூமாரிபொழியறதுன்னு சொல்லுவாளேன்னே, அதுபோல. எங்கே பார்த்தாலும், விருந்தாம், வரவேற்பாம். இதோ பார்! கழகம், காங்கிரஸ் என்று கட்சிகள் வேறு வேறு இருக்கலாம்—இருக்கட்டும். ஜவார் விஷயமா, அவருக்கு நடக்கிற ராஜோபசாரத்தைக் கேட்கும் போது, எந்தக் கட்சிக்காரனு இருந்தாலும், பெருமைப்படத்தான் வேணும் இல்லையா..."

சேரன்:—அது சரி...யார் இல்லை என்கிறது..."

சர்மா:—"அப்படிச் சொல்லு! ஆமாம் ஜவாருக்கு நடந்த வைபவங்களைப்பத்தின சேதிகள் வந்ததிலே, நோக்கு எது ப்ரமாதமானதா தோணறது, தெரியறது, சொல்லுபார்ப்போம்"

சேரன்—நான் சொல்வது கிடக்கட்டும், நீங்க சொல்லுங்கோ."

சர்மா—பார்த்தாயா, நான் மனசு விட்டுப் பேசறேன், நீ, ஒருமாதிரியாவே இருக்கறயே......"

சேரன்:—அதெல்லாம் ஒண்ணுமில்லே எனக்கு, 'பிரமாதம்'னு எது தெரியுதோ அதைச் சொன்னு, உங்களுக்குக் கோபமா இருக்கும்......"

சர்மா:—நேக்கா! கோபமா! ஜவாஹர் விஷயமா பேசறபோதா! ஒரு போதும் இல்லை"

சேரன்:—"நிச்சயமாகக் கோபம் வராதே"

சர்மா:—"இதென்னப்பா அப்படிக் கேட்கறே. நாமெல்லாம் சந்தோஷப்படத்தக்க, பெருமை கொள்ளக்கூடிய சம்பவங்கள் தானே நடந்தது—நடந்திண்டிருக்கு"

சேரன்:—என் வாயைக் கிளறிவிட்டு, பிறகு வீணு வருத்தப்படாதிங்க. ஜவகர்லாலுக்கு, ரஷியாவிலே நடந்த ராஜோபசாரத்தைப் பத்தின செய்திகளிலே எனக்கு எது ரொம்ப முக்கியமானதாக, ப்ரமாதமானதாகத் தெரிந்தது தெரியுமா......"

சர்மா;—"எது அதைத்தான் சொல்லுண்ணு கேட்டேன்"

சேரன்:—"ரஷியாவிலே முஸ்லீம்கள் வசிக்கிற பகுதிக்குப்போனுரே..."

சர்மா:..."அதுவா! ஆமாம்! அவாளைப் பார்த்ததும், ஜவாஹர், சலாம் அலேகும் என்ருராம், அவா உடனே ஒரே ஆனந்தமாகி, அலேகும் சலாம்னு பதிலுக்குச் சொன்னுளாம்........அதைத்தானே"

சேரன்:—"அதைச் சொல்லவில்லை...... அங்கே ஜவஹர்லாலுக்கு, பிரியாணியும் குருமாவும் சாப்பிடக் கொடுத்தார்களாம், 'ஜம்'னு சாப்பிட்டாராம்......"

சர்மா:—"அதைச் சொல்றயா......"

சேரன்:—"என்னய்யா,சுருதிஇறங்குது! முஸ்லீம் கொடுத்த பிரியாணி குர்மா! ஆடா, கோழியான்னு தெரியல்லே......"

சர்மா:—"ஏன், காய்கறியா இருக்கப்படாதோ......"

சேரன்:-இருந்தா, கொட்டைகொட்டை எழுத்திலே போட்டிருப்பாங்களே......ஜவாஹரும் பிராமணர் தானே, வெளுத்து வாங்கருர் பார்த்தயா, பிரியாணிகுர்மா! ஆச்சாரம் சாஸ்திரம்னு இங்கேகூவிக் கொண்டு இருக்கறிங்க, அங்கே அவர் என்னடான்னு......"

சர்மா:—"சரி, சரி, உன் கண்ணுக்குக் கடுகு, மலையாத்தெரியும்"

சேரன்:—அதுசரி! முழுப்பூசனிக்காயை சோத்திலே மறைக்கறதுதானே உம்ம வேலை"

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 13 ] 26—6—55 [ இதழ் 51

# பழகிப் பாரும்!

—[]—

"அவர்களுக்கு நேருவைப் பிடிக்கவில்லை. ஏனென்றால், அவர் வட இந்தியராம்! அவர் பிராமணராம்! அவருக்கு அவர்கள் கருப்புக்கொடி காட்ட விரும்புகின்றனர். சென்ற தடவை கோவைக்கு வந்தபோது அவர் மீது கருப்புத்துணியை வீசினார்கள். உலகம் முழுவதும் நேருஜீயை ஆவலுடன் வரவேற்கும்போது, "திரும்பிப் போ" என்று சொல்வது மானங்கெட்ட செய்கை."

இது, நமது நிதி மந்திரி இருக்கிறாரே, தோழர் சுப்பிரமணியம், அவருடைய 'பொன்' மொழியாகும். 21—6—55ல் திருச்சியில் இவ்விதமான ஒரு கண்டும் கேட்டுமறியாத ஒரு 'பொன்' மொழியை உகுத்திருக்கிறார்.

நமக்கு—திராவிட இயக்கத்தினருக்கு நேருவைப் பிடிக்கவில்லையாம்! அவர் ஒரு வடவர்—பிராமணர், எனவே அவர்மீது நமக்கு வெறுப்பாம். இது, இந்த மானங்கெடாத செயல்புரியும் மதிவாணருக்கு எப்படித் தெரிந்ததென்பதுதான் நமக்குப் புரியவில்லை. தனிப்பட்ட முறையில் நேருமீது தாங்கல் ஏற்படக் காரணம் எதுவும் இல்லையே! நாம் நேரு பண்டிதரின் பல கருத்துக்களை வரவேற்று ஆதரித்திருக்கிறோம். அவர் ஒரு வடவர்—பிராமணர் என்பதற்காக-அவருடைய நல்ல கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்ததில்லை-மறுப்பதில்லை. சமுதாய சீர்திருத்தத் துறையிலே அவ்வப்போது அவர் வெளியிடும் நல்ல கருத்துக்களை நாம் ஆதரித்திருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல கருத்துக்கள் அல்லது யோசனைகள் வெறும் பேச்சளவில் மட்டும் நின்றுவிடக்கூடாது, செயலளவிலும் வர வேண்டுமென்று அவரை உற்சாகப்படுத்தியிருக்கிறோம். அவர்தம்முடைய மகளுக்கு எழுதிய கடிதத்திலிருந்து பல நல்ல கருத்துக்களை எடுத்து மக்கள் முன்னிலையில் வைத்து அவருக்குப் பெருமை உண்டாக்கியிருக்கிறோம். எனவே, அவரிடம் தனிப்பட்ட முறையில் நமக்கு எந்தவிதமான விரோதமும் கிடையாது. அவர் வடவர்—பிராமணன் என்பதற்காக அவரை நாம் எப்போதுமே வெறுத்ததில்லை.

பிராம்மணர்கள் நமக்கு நண்பர்கள். வடவர்கள் நமக்குப் பக்கத்து வீட்டுக்காரர்கள். எனவே இவர்களை நாம் வெறுக்கவோ பகைக்கவோ எந்தவிதமான காரணமும் தனிப்பட்ட முறையில் கிடையாது. இதனைத் தமது திறமையைத் தாமே அளந்து வைத்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் கோவையாரால் உணர முடியவில்லை.

வடநாட்டாதிக்கத்தை எதிர்ப்பதற்கும், பார்ப்பனியத்தை வெறுப்பதற்குமுள்ள காரண காரியங்களை ஆர அமர இருந்து அலசிப்பார்க்கும் திறமையையும் பொறுமையையும் அமைச்சர் பெற்றுவிடுவாரானால், நாம் நேருவை அவர் ஒரு வடவர்—பிராமணர் என்பதற்காக எதிர்க்குறோம் என்று வறிதே அரற்றித் திரியமாட்டார்.

அரசியலில் வடவர் ஆதிக்கமும், சமுதாயத்தில் பார்ப்பன ஆதிக்கமும், பொருளாதாரத்தில் முதலாளிகள் ஆதிக்கமும் வேரூன்றி இருந்துகொண்டு தென்னாட்டு மக்களின் வாழ்க்கைத்துறை அனைத்தையும் பாழாக்குவதற்கு நேரு சர்க்கார் இடமளித்து வரும் போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாகவே, வடநாட்டிலிருந்து வரும் தலைவர்களுக்கு இங்கு கருப்புக்கொடி காட்டப்படுகிறது. நேருமட்டுமல்ல, வடநாட்டு ஆட்சிப்பீடப் பொறுப்பிலிருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் இங்கு வரும்போது, நமது வெறுப்பையும் அதிர்ப்தியையும் தெரிவிப்பதற்காகக் கருப்புக்கொடி காட்டப்படுகிறது. திவாகர் வந்தபோதும், ஆச்சாரியார் வந்தபோதும், மாவ்லங்கர் வந்தபோதும், நேரு வந்தபோதும் கருப்புக்கொடி காட்டப்படுகிறதென்றால், அதில் வடநாடு தென்னாடோ அல்லது பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதாரோ என்று பாகுபாடு காட்டுவதில்லை.

வடநாட்டு ஆதிக்கம்! அதற்குத் தலைமை தாங்குபவர் நேரு பண்டிதர்; அவருக்குப் பக்கபலமாக நிற்பவர்கள் மற்றவர்கள். எனவே, வடநாட்டிலிருந்து இங்கு வரும் அரசியல் ஆதிக்க வெறி கொண்ட அனைவருக்கும் கருப்புக்கொடி காட்டப்படுகிறது. இதில் வடவர் பிராமணர் என்ற வேறுபாடே கிடையாது. இந்த மகத்தான உண்மையை உணர, மந்திரியாக வருவதற்கு வேண்டிய 'திறமை' மட்டும் இருந்தால் போதாது. இதற்குப் பிரத்தியேகமான திறமை வேண்டும். அந்தத் திறமையைப் பெறக் காங்கிரஸ் பள்ளிக்கூடத்தில் இடமும்வசதியும் சொல்லித்தருவாரும் கிடையாது—எனவே, பண மந்திரி சிறிது காலம் நம்முடைய பள்ளிக்கூடத்தில் பயில்வதற்குச் சங்கோசப்பட்டால், நம்முடைய தோழர்களுடனாவது சிலகாலம் பழகும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வாரானால், நிச்சயம் அவருக்கு இந்தத்திறமை உண்டாகும்—சந்தேகம் வேண்டாம்.

★

## ஜெயந்தி இல்லை

"என்ன ஓய்! பார்த்தும் பார்க்காததுபோலப் கோயிண்டிருக்கீர் …………"

"அடடா, பார்க்கல்லே ஸ்வாமி! க்ஷமிக்கணும்………"

"சரி, சரி; என்ன ஆச்சி, அந்தப் படவிஷயமா?"

"எந்தப்படம்—நான் சினிமாவுக்குப்போயி மூணுமாசமாறது……"

"சினிமாப்படமல்ல ஓய்! நம்ம மானத்தை வாங்கற மாதிரியான படம்னு சொன்னீரே—துக்கதினம் கொண்டாடச் சொன்னீரே"

"அதுவா! ஒரு மாதிரியா விஷயம் முடிஞ்சிருக்கு"

"எப்படி?"

"இனி அது போலப்படம் போடமாட்டா!"

"போட்டுள்ள படம்?"

"அதையும் ஒட்டமாட்டா"

"அப்ப, ஜெயம்னு சொல்லும்"

"சொல்லணுமா ஓய்! நாம் எடுக்கற காரியம், எது சொத்தை ஆயிடுது, சொல்லும், பார்ப்போம்"

"ஆமாம்! ஓய்! ஏன் ஒருஜெயந்தி கொண்டாடப்படாது. செலவு பூரா நான் தர்ரேன், ஓய்"

"கூடாது ஓய்! சர்க்கார், நமக்குச் சரணாகதி ஆயிட்டான்னு வெளியே தெரியப்படாது"

"ஏனாம்"

"அதெல்லாம் பெரிய இடத்து விஷயம். நமக்கென்ன ஓய், காரியம் பெரிசா, வீரியம் பெரிசா?"

"அதுவும் சரிதான். நம்மகாரியம் பலிச்சுதுன்னா போதும், அதை வெளியே தம்மட்டம் அடிச்சிண்டு இருக்கணுமா,"




# மகுடி ஊதும் மகானுபாவர்கள்!

தம்பி,

"ஆமாம். இவர்கள் பூஜையும் பக்தியும் பத்தி எரிஞ்சாப்போலத்தான் இருக்கு. சுட்ட செங்கல்லை வைத்து செய்கிற பூஜைக்கு எதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்" என்றாள். அவர்கள் பூஜித்த தெய்வம் செங்கல்லால் ஆனது தான்.

எனக்குக் கோபம் வந்தது. 'நீ கோவிலிலே போய் கும்பிடுகிற கருங்கல் சாமியிடம் மாத்திரம் என்ன இருக்கிறதாம்" என்றேன்.

"போதும் பேசாமல் இருங்கள். கோவில்களிலே மந்திரங்கள் யந்திரங்கள் எல்லாம் செய்து விக்ரஹங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். அந்த விக்ரஹங்களும் இந்தச் சுட்ட செங்கல்லும் ஒன்றாய் விடுமாக்கும்" என்றாள்.

"அது எனக்குத் தெரியாது. முன்பு கஜனி மகமதும் அவனுடைய ஆட்களும் கோயில்களை இடித்துத் தள்ளி, விக்ரஹங்களை எல்லாம் மசூதிகளில் வாசற்படிகளாகப் போட்ட காலத்தில் இந்த யந்திர மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை, தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுள், நரசிம்மாவதாரத்தில் வந்ததுபோல, அந்த வாசற்படிகளிலிருந்து வந்து, கஜனியின் ஆட்களை, ஹிரண்யனைக் கிழித்ததுபோல கிழித்து விடவில்லை. பூஜைக்குக் கருங்கல்லாய் இருந்தாலென்ன? தெய்வம் கல்லுக்குள்ளேயா இருக்கிறது? நெஞ்சுக்குள்ளே வேண்டும்" என்றேன்.

இராணியும் நானும் இப்படிப் பேசிக்கொண்டோம் என்று எண்ணிவிடாதே — வாதாடும் அளவுக்கு நேரம்கூடக் கிடைக்கிறதா! இது சில நாட்களுக்கு முன் நான் படித்த கதையில், ஒரு புருஷனும், மனைவியும் நடாத்தும் உரையாடல் சிறுகதை—பெரிய தத்துவ விளக்கத்துக்காகத் தீட்டப்படும் 'ரகம்' இது என்று முன்னுரை சிபாரிசு செய்கிறது.

கதைகூறுகிறேன். ஜன்னலுக்கு வெளியே எட்டிப்பார்க்கிறான் ஒரு இலக்கிய ஆய்வாளன்! வெளியில் ரிக்ஷாக்காரர்கள், செங்கல்ஒன்றை நிறுத்திவைத்து, பூ சொரிந்து பூஜை செய்கிறார்கள். சரஸ்வதி பூஜை!! இந்த இலக்கிய ஆய்வாளரும், சரஸ்வதி, பூஜையை முடித்துவிட்டுத் தான் உட்காருகிறார். ரிக்ஷாக்காரர் நடத்தும் பூஜையில் உண்மையான பக்தி இருப்பதை இவர் உணருகிறார். (இவர் உணர்ந்து என்ன பலன்! கடவுளல்லவா உணர வேண்டும்! உணர்ந்தால் இந்த ஜென்மங்களை ஏன் மனித மாடுகளாக்கி வேதனைப் படுகுழியில் தள்ள வேண்டும் என்று கேட்பாய், தம்பி) உணர்ந்து உவகையுடன் தன் இல்லாளைக் கூப்பிட்டு, "இதோ பார்! இவர்கள் நடத்தும் பூஜையை. இதிலல்லவாஉண்மைப் பக்தி இருக்கிறது" என்று கூறுகிறார். அந்த அணங்கு, செங்கல்லை வைத்துக் கும்பிடுவதைக் கேலி செய்கிறாள், உடனே இவர், இலக்கிய ஆய்வாளரல்லவா, ஒரு தத்துவத்தை எடுத்து வீசுகிறார், கடவுள் கல்லிலா இருப்பார். நெஞ்சிலல்லவா இருக்கிறார்' என்கிறார். கூறிவிட்டு மறுப்பாரோ இதனை என்று கேட்கிறார்; மாதுசிரோமணி, "எனக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம், இட்லிக்கு அரைக்கணும்" என்று கூறிவிட்டு உள்ளே செல்கிறாள்.

சுயமரியாதைக்காரர் தவிர வேறு யாரால் இப்படிப்பட்ட கருத்துக் குலுங்கும் கதை தீட்டமுடியும்—என்று எண்ணிக்கொள்வாய். நீ மட்டும் என்ன தம்பி, நானும் அப்படித்தான் எண்ணினேன்; எழுதினவரும், நாமெல்லாம் அவ்விதம் எண்ணிக்கொள்ள இடம் வைத்துத்தான் எழுதினார். ஆனால், கதையின் நோக்கம் முற்றிலும் வேறு!!

எழுதியவர், சுயமரியாதைக்காரராக இருக்கத் துணியவில்லை; 'மேதை'யாகிவிட விரும்புகிறார்; எனவே, கடவுள் எங்கு உறைபவர்? கருத்திலா, கல்லிலா, என்ற விவாதத்தைத் துவக்கி, முடிவு கூறாமல், அம்மையை மாவு அரைக்க அனுப்பிவிட்டு, ஐயாவைக் கொண்டு, கார்ல்மார்க்சைத் தோற்கடிக்கச் செய்கிறார்!!

ஜன்னலுக்கு வெளியே இருந்து பார்த்தாரல்லவா, பக்தியுடன் பூஜை செய்யும் ரிக்ஷாக்காரர்களை, அவர்கள் அன்று இரவு குடித்து விட்டு, அடிதடியில் இறங்கி, ஆபாசமாக நடந்துகொண்டார்களாம். இதைக் கண்டு இவர் மிக்க வருந்துகிறார். இவ்வளவுதானா இவர்களின் பூஜையும் பக்தியும் என்று எண்ணி உள்ளம் நைந்து போகிறது.

இந்தக் கட்டத்தோடு கதையை முடித்து, பூஜைகள் செய்துவிடுவதாலேயே, போக்கு மாறிவிடுவதில்லை, பூசல் ஒழிந்துபோவதில்லை, புத்தி தெளிவாவதில்லை என்று அறிவுரை தருகிறாரா என்று கேட்கிறாய், தம்பி! அது நமது 'முறை'—மேதைகள் அப்படிச் செய்வார்களா?

இலக்கிய ஆய்வாளர், இல்லக்கிழத்தியுடன், கல்லிலா கடவுள் இருப்பார், இருந்திருந்தால் கஜனி மகமது கண்டதுண்டமாக்கப்பட்டிருக்கமாட்டானா என்று வாதாடினாரல்லவா! அதேமுறையில், கல்லைக் கடவுளாகக் கருதிக் கும்பிடுவதும், பூஜை செய்வதும், கன்னத்தில் அடித்துக்கொள்வதும், காப்பாற்று சாமி என்று வேண்டிக் கொள்வதும், நல்லறிவையும் நன்

நெறியையும் தரக்கூடுமானால், காலையிலே (இவர் பார்த்து மெச்சத்தக்க வகையில்) பூஜை செய்த ரிக்ஷாக்காரர்கள், மாலை குடித்துவிட்டு வந்து கும்மாளமடிக்கும் நிலை வந்திருக்கலாமா, என்றெல்லாம் ஆராயவில்லை.

ஆராய்வாரா! 'மேதை'யாக இருக்கவேண்டுமானால், அத்தகைய ஆபத்தான ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடாதே! சுயமரியாதைக்காரனாக்கிவிடுமே!

இவருடன் வாதாடமுடியாமலோ, விருப்பமில்லாமலோ, மனைவி, இட்லிக்கு மாவு அரைக்கச் சென்றுவிட்டார்கள்; இவர், இந்தக் காட்சி கிளறிவிடக்கூடிய கருத்துக்களைச் சந்திக்க அஞ்சி, தூங்கச் செல்கிறார்.

காலையில் மார்க்கட்டுக்குச் செல்கிறார்.

குடிபோதையிலே, எந்தச் 'சாமி' பந்தலை ரிக்ஷாக்காரர் பிய்த்துப் போட்டனரோ, அதை அவர்கள் செப்பனிட்டுக்கொண்டிருக்கக் காண்கிறார்!

இவர், உங்கள் மனதிலே நேற்றைய பூஜை உயரிய எண்ணங்களைத் தரவில்லையா! மனிதன் தேவனாகக்கூடும் பூஜா மகிமையால் என்று கூறப்படுகிறது. நீங்களோ கேவலம் மிருகமாகிவிட்டீர்களே நேற்றிரவு—என்று விரிவுரையாற்றினாரா? இல்லை! சிறிதளவு பயம் இருந்திருக்கலாம், "சரிதான், போ சாமி! சும்மா என்னமோ எங்களைத் திட்டறே! வா, சாமி, என்கூட! எத்தினி பெரிய பார்ப்பானுங்களெல்லாம் குடிச்சிப்போட்டு மில்ட்டேரி ஓட்டல்லே பிரியாணி குர்மாவைத் தின்னு ஏப்பம்விடறானுங்கோன்னு காட்டறேன்" என்று ரிக்ஷாக்காரன், 'வம்புதும்பு' பேசிவிடக்கூடும். எனவே, இவர் இதமாக அவர்களிடம் பேசி, குடிக்கக் கூடாது என்று உபதேசிக்க, அவர்களும் சாமி சாட்சியாகக் குடிப்பதில்லை என்று சத்யம் செய்கிறார்கள்.

இதுதான் கதை! இதிலிருந்து இவர் பெற்று, படிப்போருக்குத் தரும் பாடம் என்ன தெரியுமோ? **கபந்த தத்துவத்தைப் போதித்த கார்ல் மார்க்சின் போதை சித்தாந்தம் கொஞ்சமும் உண்மையில்லை** — என்பது பாடம் —பாடமாம்!!

இவர் தீட்டிய கதைக்கும் மார்க்சின் தத்துவத்துக்கும், என்ன தொடர்பு, எந்தச் சம்பவம் மார்க்சின் தத்துவத்தைப் பொய்ப்பிக்கிறது—இவைபற்றி விளக்கினாரா—இல்லை! ஏன் விளக்கவேண்டும்! மேதைகளுக்கு அதுவா வேலை!!

மார்க்ஸ், மதம் மக்களுக்கு அபின் என்றார்.

அபின் போதைதருவது, மதமும் மக்கள் மனதிலே ஒரு மயக்கமளிக்கிறது, என்பது பொருள்!

அந்தத் தத்துவம் பொய் என்று கதை எங்கே காட்டுகிறது!

மதம்—பூஜைசெய்யவைத்தது—செய்தனர்.

குடி—சண்டையைக் கிளப்பிற்று சண்டை போட்டனர்.

சண்டையை நிறுத்தி சன்மார்க்கத்தில் ஈடுபடுத்த மதமா பயன்பட்டது? இல்லை! குடிக்காதீர்கள் என்ற அறிவுரை பயன்பட்டது.

குடித்துவிட்டுக் கூத்தாடிய ரிக்ஷாக்காரர்கள் தெளிவுபெறுகிறார்கள், இவர் 'போதை' கொள்கிறார்—மத போதை!!

இதைக் கக்க, ஒரு கதை!

இந்தக் கதையின் இடையே கடவுள் எங்கே இருக்கிறார், கல்லிலா, நெஞ்சிலா என்று ஒரு விவாதம்—முடிவுபெறாமல்!!

மேதைகளென்றும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களென்றும் தங்களைக் கூறிக் கொள்பவர்கள், பெரும்பாலும், இதே 'பாணி'யில்தான் எழுதுகிறார்கள்.

முற்போக்குக் கருத்துகள் தூவப்படும்! பிறகு, அது மறைக்கப்படும் அளவுக்குப் பழைமை கொட்டப்படும்!!

இந்தப் போக்கினர்தான், கதை, நாடகம், சினிமா இவைகளிலே பிரசாரம் கூடாது — பொதுவாக கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தினால், அதன் மேன்மையே குலைந்துபோகிறது, தூய்மை நாசமாகிறது என்று 'இலக்கிய உபதேசம்' செய்பவர்கள்.

கார்ல்மார்க்சின் தத்துவத்தைக் கண்டிக்கவேண்டும் என்ற அவசியம் என்ன வந்தது இதிலே! ஏன் அதைச் சொருகிக் காட்டுகிறார்!! இது பிரசாரமல்லவா?

பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று பேசுபவர்கள், தமது ஒவ்வொரு முயற்சியிலும் பிரசாரத்தில்தான் ஈடுபடுகிறார்கள் — வெற்றிபெறுவதில்லை பாபம், அதனால்தான், வெந்த உள்ளத்துடன், பிறர் வெற்றிகரமாகக் கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது கண்டு, வெகுண்டு, கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுகிறார்கள்.

"அது என்ன வழக்கம், சார்! எனக்குத் துளியும் பிடிப்பதில்லை, மனைவியைக் கூட்டிக்கொண்டுதான், 'பீச்'சுக்கு வரவேண்டுமா? பொம்பனாட்டிங்களோடு அவளை வரச்சொல்லிவிட்டு, வரப்படாதோ! நான் அப்படித்தான்" என்கிறார் எம்பெருமாளய்யங்கார்! காரணம் இருக்கலாம்—அவரைப் பொறுத்தவரையில்! அம்மையின் திருப்பாதங்கள், கஜமுகன் அருள்பாலிக்கப்பட்டவையாக இருக்கலாம், வெளியே அழைத்துவந்தால், ஆபாசமாக இருக்குமென்று ஐயங்கார் ஸ்வாமிகள் கருதியிருக்கலாம்.

"இந்த 'ஜட'த்தோடு யார் போவா, பீச்சுக்கு, இது மூஞ்சியும் முகரக்கட்டையும் பார்த்தாலே, 'பீச்'சுக்கு வர்ரவா, கேலியான்னா பேசுவா! இதனோடே 'தொண தொணப்பை' ஆத்திலே சகிக்கிறது போதாதுன்னு, பீச்சுக்குப் போயிவேறே பிராணனைவிடணுமா — வேண்டாம்டிம்மா; நான் போகல்லே, அவளோட" என்று சகதர்மணி கூறிவிட்டிருக்கலாம்.

அநாகரீகமான வேறு பல காரணங்களும் இருக்கலாம்.

அவர், தமது துணைவியை உடன் அழைத்து வாராததாலேயே அதுதான் முறை, தமது இல்லக் கிழத்தியுடன் வருபவர்கள், நாகரீக மற்றவர்கள் என்று பேசுவது அறிவுடைமையாகுமா!

அதுபோலத்தான், இவர்களால் கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்த முடியவில்லை.

அந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கிட்டவில்லை.

இதைக்கொண்டு, கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தும் மற்றவர்களைப் பார்த்து, பொம்மனாட்டிகளை ஏன் அழைச்சிண்டு வரணும் என்று கேட்கும் போக்கில், கலையில் பிரசாரம் இருக்கலாமா, என்று இந்த 'மேதை'கள் பேசுகிறார்கள்.

தம்பி! நான் இப்படிச் சொல்வதால், சுவையும் அழகும் கொண்ட வகையில் எழுதக்கூடியவர்கள் நம்மவர்கள் மட்டும்தான், மறுமலர்ச்சி

எழுத்தாளர்களுக்கு அவ்விதம் எழுதவே தெரியாது, என்று அகம் பாவம் கொள்கிறேன் என்று எண்ணிக் கொள்ளப்போகிறார்கள் —சொல்லிவிடு அவர்களுக்கு நான் அப்படிப்பட்டவனல்ல என்பதை!

அவர்கள் தோல்வி அடைவதற்குக் காரணம் அழகாக, அருமையாக எழுதத்தெரியாததால், அந்தத் திறமை இல்லாததால் அல்ல! அவர்களின் தோல்விக்குக் காரணம், அவர்கள் மனதிலே, தெளிவான திட்டமான கொள்கையும், அதைக் கடைப்பிடித்தாகவேண்டும் என்ற நேர்மையும் இருப்பதில்லை.

பழமை செத்துவிடுகிறதே என்ற துக்கம் குடைகிறது, அதே போது இந்த நாட்களில் பழமையை ஆதரிப்பதா என்று வெட்கமும் வேலாகிக் குத்துகிறது, எந்த முகாமில் இருப்பது, என்பதுபற்றி முடிவெடுக்க இயலாமல் அவர்கள் குழம்பிக் கிடக்கிறார்கள்! அந்தக் குழப்பம், அவர்களின் திறமையை மண்ணுக்கிவிடுகிறது.

இந்தக் கதையையே பாரேன்! கல்லுக்கு மந்திர சக்தி ஊட்டுகிறார்கள் — தெய்வம் ஆகிறது— என்ற பழமையை 'பாரியாள்' கூறிடக் கேட்டோம். இது நமக்குப் புரிகிறது! ஓஹோ! இது பத்தாம் பசலி! எவ்வளவு சொன்னாலும் ஏறாது!! என்பது தெரிகிறது. ஆனால் இலக்கிய ஆய்வாளனாகவும், அந்த மாதுசிரோமணியின் மணவாளனாகவும் இருப்பவரின் போக்கு எப்படி இருக்கிறது. பழமையின் பக்கம் நிற்கிறாரா! புதுமைக்காகப் போர் முரசு கொட்டுகிறாரா? என்று பாருங்கள்; குழம்புகிறார், வேறென்ன!

புதுமைக் கருத்திலே திளைத்தவர்போல, மனைவியிடம், கஜனி மகமதும் அவருடைய ஆட்களும் கோயில்களை இடித்துத் தள்ளி, விக்ரஹங்களை எல்லாம் மசூதிகளிலே வாசற்படிகளாகப் போட்ட காலத்தில் இந்த யந்திர மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுள், நரசிம்மாவதாரத்தில் வந்ததுபோல, அந்த வாசற்படிகளிலிருந்து வந்து கஜனியின் ஆட்களை, ஹிரண்யனைக் கிழித்ததுபோலக் கிழித்து விடவில்லை." என்று கூறி, ஏன் என்று கேட்கிறார். எவ்வளவு தீவிரத் தன்மை சுடர்விடுகிறது! எத்துணை பகுத்தறிவுக் கதிர் தெரிகிறது! ஆனால் எற்றுக்கு!!

நேக்கு இந்த வம்புதும்பு தெரியாது என்று கூறிவிட்டு அந்த அம்மை, இட்லிக்கு மாவு அரைக்கச் சென்றுவிடுகிறார். நான் அந்த அம்மையை மதிக்கிறேன், நமக்குத் தெரியாது தேவையற்றது இந்தப் பிரச்னை என்ற தன்னடக்கம் இருக்கிறது, இவர்களிடம். சரியோ தவறோ, பழமைதான் பிடித்தமாக இருக்கிறது! அதற்கு ஆதாரம் தேடவேண்டும் என்ற அவசியமும் தோன்றவில்லை!! அவர்களின் நிலை, புரிகிறது, நன்றாக. ஆனால் இவர்! அசகாயசூரர் போல, ஒரு பிரச்னையைக் கிளப்புகிறார், தூணிலிருந்து வெளிப்பட்ட துளசி மாலையோன், ஏன் கஜனி மகமதைக் கிழித்தெறிய, கல்லிலிருந்து வெளிவரவில்லை, என்று கிளப்பிவிட்டு, பதில் அளிக்கிறாரா, எந்தப் பக்கமாகவாவது? அது தான் இல்லை! அம்மை சுட்டுத்தரப்போகும் இட்லிக்குக் காத்துக்கொண்டிருக்கிறவராகத் தெரிகிறதேதவிர, கடவுள் எங்கு இருப்பார், கல்லிலா, நெஞ்சத்திலா என்ற சிக்கலான பிரச்னையைக் கிளப்பிவிட்டோமே, ஒரு கதையில்; இதற்கு ஏதாவதோர் சார்பில் பதில் தரவேண்டாமா என்றபொறுப்புக்கொண்டவராகத் தெரியவில்லை.

"தெற்கே போகிற வண்டிங்களா! நீங்க எங்கே மதுரைக்குப் போகிறிங்களா?" என்று பன்னிப் பன்னிக் கேட்டுவிட்டு, "அந்த ரயில் வந்ததும் வராததும் எனக்குத் தெரியாதுங்க" என்று பேசும் திம்மப்பன்போல, "யாருக்கு? உன் மக கலியாணமா! ஆவணி பதினைந்தா! ஆற்காட்டிலா! ஆறு பவுனிலா செயின் போடணும்! செலவு ஆயிரத்துக்கு மேலே ஆகுமா! நல்ல மனுஷன், உனக்குச் சகாயம் செய்ய யாருக்கும் இஷ்டம் தான், பகவான் எல்லாக் காரியத்தையும் சுபமாக முடித்து வைப்பார், கவலைப் படாதே" என்று உபசாரத்தை வாரி வழங்கிவிட்டு, கடைசியில், "இப்ப என்னிடம் பணம் இல்லையே வேறே இடம் பாரப்பா!" என்று கடன்தந்து உதவாமல் விரட்டிவிடும் திமிரப்பன்போல், கடவுள் கல்லில் இருந்தால் கஜனியியைக் கிழித்தெறிந் திருக்க வேண்டாமா என்று சூரத்தனமானகேள்வியைக் கிளப்பிவிட்டு, சுட்டுக்கொண்டுவா, இட்டிலியை என்று கூறிவிட்டுச் சும்மா இருந்துவிடுவதா!!

இந்தப் போக்கினால்தான், இவர்களைவிட இலக்கியத் திறமையும் எழுதும் திறமையும், குறைந்த அளவு பெற்றுள்ள நம்மவர்கள் பெறுகிற வகையான அளவுள்ள வெற்றியை இவர்களால் பெற முடிவதில்லை. ஆச்சாரியாரல்லவா இந்தக் 'கோஷ்டி'க்குத் தலைமை வகிக்கிறார்! எவ்வளவு பரிதாபம் பாருங்கள், இந்தத் தள்ளாத வயதில், இதுநாள்வரை, தாம் பெற்ற அனுபவத்தின் காரணமாக பெறக் கிடைக்கும் அரசியல் நுணுக்கங்களை எழுதவேண்டியவர், அனுமனின் வாலில் மூட்டப்பட்ட தீபற்றி எழுதிக்கொண்டிருக்கவேண்டி நேரிடுகிறது!

பழமைக்கு ஏதோ புது விளக்கம் கொடுத்து, நம்மவர்களின் வாதங்களைத் தவிடுபொடியாக்கி விடுவதாக மனப்பால் குடிக்கிறார்கள்; புதுமையோ எந்தத் திக்கிலும் இவர்களைத் தாக்கித் தகர்த்த வண்ணம் இருக்கிறது!

இவர்களின் பழமைப் பிரசாரத்தின் காரணமாக, 'பக்தர்'களாக இருந்துவருபவர்கள், இவர்கள் நமக்குச் சமாதானம் கூறுவதற்காக விளக்கங்கள், தத்துவார்த்தங்கள் தருகிறார்களே, அவைகளையாவது ஏற்றுக்கொண்டு, அவைகளின்படியாவது தங்கள் போக்கை மாற்றிக் கொள்கிறார்களா என்று பார்த்தால் அதுவுமில்லை.

**வயலில் விளைச்சல் அதிகம்வேண்டும்— அதற்கு வனதேவதைக்கு நரபலி கொடுக்க வேண்டும் என்ற பழமை எண்ணம்பிடித்த ஆதிவாசிகள், கடந்த கிழமைதான், எட்டு வயதுப் பாலகனைக் கொன்று படைத்திருக்கிறார்கள்!**

எத்தன் இவன், பணத்தை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டினான் என்கின்றனர் போலீசார்; பிடிபட்ட பாஸ்கரராவ் என்பவனோ, நான் பக்தன், எத்தனல்ல! பணத்தை எடுத்தேன், செலவிட்டேன்; எதற்கு? பகவானைப் பிரத்யட்சமாகக் காட்டுவதாகப் பக்கிரி சொன்னான், அவன் சொன்னபடி பூஜை பல செய்யவே செலவிட்டேன்! களவு என்கிறீர்கள்; கடவுளைத் தேடிக் காணச் சென்ற என் புண்ணிய காரியத்தை! என்று வாதாடுகிறான்.

புதுமையின் வேகத்தையும் தடுக்கமுடிவதில்லை — பழமையாளர்களையும், நாசுக்காகவாவது திருத்தமடையச் செய்யமுடிவ

தில்லை. காரணம், இவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல, உள்ள சரக்கு மகாமட்டம். ஊசல் சரக்கை உண்மை அறிந்த மக்கள் குப்பைக்குப் போடுகிறார்கள்; இவர்கள் அதைக் குனிந்தெடுத்து, கூவிக் கூவி விற்கிறார்கள்! வியாபாரம் மிக மிக மந்தமாக இருக்கிறது!!

தம்பி, ஆச்சாரியார் போன்ற அதிமேதாவிகளுக்கே ஏற்படும் குழப்பத்தைப் பாரேன், நிலைமை விளங்கும்.

சேக்கிழார் திருநாளில் பேசுவதற்காக, ஆச்சாரியாரை அழைத்தனர், சென்ற கிழமை. சைவர்களுக்கு அவ்வளவு ஆள்பஞ்சமா என்று கேட்காதே தம்பி! அவர்களுக்கு அவ்வளவு சமரச ஞானம் என்று எண்ணிக்கொள்! இப்போதெல்லாம், அரியும் அரனும் ஒண்ணு! சென்ற இடத்தில் ஆச்சாரியாருக்கு உள்ள குழப்பம் அவர் பேச்சிலே, எப்படி பளிச்செனத் தெரிகிறது பார், வேடிக்கையாக இருக்கும்.

திருநீறு, நாமம், இவைகளை அணிந்துகொள்ளவேண்டும், அது பக்திக்கு அடையாளம், பரிகாசத்துக்கு உரியதல்ல என்று வலியுறுத்துகிறார் ஆச்சாரியார். கேள், அவர் பேச்சை. "சைவம் வைஷ்ணவம் என இரண்டுவிதமான சமயம் நாட்டில் பரவி வருகிறது. முக்கியமாக முகத்தில் போடும் நாமக் குறியிலிருந்து தெரிகிறது. இதில் மறைவு கிடையாது. எல்லோருக்கும் தெரியும்படியாகப் போட்டுக்கொள்ளும்படி ஆசாரியார்கள் சொல்லியிருக்கிறார்கள்."

இவ்விதம் பேசி, திருநாமம் அணிந்தாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். சைவர்களிடமா, என்று ஆச்சரியப்படாதே, அவர்கள் திருநீறு பூசட்டும், வைணவர் திருநாமம் தரிக்கட்டும் என்பது பொருள், என்று பெருந்தன்மையுடன் ஒப்புக்கொள்வோம்.

திருநாமத்தின் அவசியத்தை இவ்வளவு வலியுறுத்தி ஆசாரியர்கள் ஆக்ஞையிட்டுள்ளனர் என்று ஆதாரம் காட்டிப் பேசினாரே தவிர அவருக்குக் குழப்பம் வராமலில்லை. அவர் நெற்றியில் நாமம் இல்லை! மற்றவர்களுக்கு நாமம்போடச் சொல்லி வலியுறுத்துகிறார், அதன் மகிமையை எடுத்துக் கூறுகிறார், அவர் நெற்றியிலே நாமம் இல்லை. என்ன எண்ணிக்கொள்வார்களோ, என்று குழம்புமல்லவா! எனவே சொல்கிறார், அதே போது,

"எனக்கு நாமக்குறியில்லையே என்று நீங்கள் யோசிக்கலாம். வேஷத்தில் பக்தி இல்லை" என்று கூறுகிறார்!

எப்படி இருக்கிறது வாதம்! எவ்வளவு குழப்பம், எவ்வளவு பெரியவருக்கு!!

திருநாமம் தரித்தல் அவசியம்—ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்கள்! இதைச் சொல்வதும் ஆசாரியார் தான்—நாமக்குறி இல்லாவிட்டால் என்ன, வேஷத்தில் பக்தி இல்லை என்று சொல்லுபவரும், அவரே தான்!

வேஷம் பக்தியல்ல என்பதை நம்பினால், நாமம் போட்டாக வேண்டும், அதுவும் எல்லோருக்கும் தெரியும்படி போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கத் தேவையில்லை!

நாமம் தரித்தாகவேண்டும், ஆசார்யாளின் கட்டளை அது, அதனை மீறக்கூடாது என்பதிலே உறுதியும் நம்பிக்கையும் இருந்தால் நாமம் தரித்துக்கொண்டு, சென்றிருக்க வேண்டும்.

எதிலும் உறுதிப்பாடும், உத்வேகமும் இல்லை, எனவே உள்ளத்தில் ஒரே சேறு!!

இந்நிலை இவருக்கு என்றால், சில்லரைகள் சிரமப்படுவதிலே ஆச்சரியமென்ன.

தம்பி! இவை பற்றி நான் எழுதுவதற்குக் காரணம், இவர்களைக் கேலிபேசிக் களிப்பூட்ட வேண்டும் என்பதல்ல. நாம் பெற்றுள்ள கருத்துகள், மேற்கொண்டுள்ள பணி, எவ்வளவு மாண்புள்ளது என்பதை விளக்கத்தான்! திறமை முழுவதையும், ஆற்றல் அவ்வளவையும், தந்திரம் அத்தனையையும், உபயோகித்தாலும், வெற்றி காண முடியாத நிலையில் ஆச்சாரியார் போன்றோர் தள்ளப்பட்டுள்ளனர்—காரணம் அவர்கள் செத்த பாம்பின் முன்பு மகுடி ஊதிப்பார்க்கிறார்கள்!! இவர்களைவிட "எனக்கொன்றும் தெரியாது, இட்லி மாவு அரைக்கவேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்ற அம்மையார் எவ்வளவோ, மேல், என்பேன். செத்த பாம்பைப் படமெடுத்தாடச் சொல்லி மகுடி ஊதும் இந்த மகானுபாவர்களைவிட இந்த மாதுசிரோமணி எவ்வளவோ மேல் தான், சந்தேகமின்றி.

அன்புள்ள,

**அண்ணாத்துரை.**

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவேண்டும் என்பதுபோன்ற தீவிரத் திட்டத்துக்காக நாம் பணியாற்றினால். இந்தத் தினமணி, நமக்குப் பெரும் ஆதரவு திரட்டித் தரக்கூட வேண்டாம்; கெடுதல் செய்யாமலாவது இருக்குமா?

வீண் கிளர்ச்சி — துவேஷப் பிரசாரம் — என்ற சொல்லம்புகளை ஏவாதிருக்குமா? முன்னாள் நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது, தினமணிகளிடம் இதை எதிர்பார்ப்பதற்கில்லை என்றுதான் கூறவேண்டும்.

தினமணிகள் திரும்பிக்கூடப் பார்க்காதிருந்த காலத்திலிருந்து, கைத்தறியாளர்களின் சார்பில் பணியாற்றிவரும், நாம், இனியும் தொடர்ந்து அந்தப் பணியாற்றிக் கொண்டு வருவோம்—ஆனால், வடநாட்டு ஆதிக்கத்தை நீக்கிக்கொள்ளாத வரையில், பிரச்னை தீராது, என்பதை உணர்ந்து அதற்கேற்ற வகையில்,நமது பணியின் வகையை வகுத்துக்கொள்கிறோம். ஆயிரம் தலையங்கம் தீட்டினாலும், அஞ்சா நெஞ்சுடன் கொள்கைஉறுதியுடன் இதற்கான பிரச்சாரப் பணி புரியும் படையினைத் தினமணியல் காண முடியாது.

"பாருங்கோ, கைநெசவுத் துணி சிலாக்கியமானது. காஞ்சி வரதருக்கும் காமாட்சி அம்மனுக்கும், அரங்கநாதருக்கும்,நாச்சியாருக்கும் கைத்தறி ஆடைதான் உடுத்தறது. பகவானுக்கே ப்ரீதியானதென்னு அதை நாமெல்லாம் ஆதரிக்கத்தான் வேணும்" என்ற அந்திமபேர் அம்மாஞ்சி பேச்சுக்கு ஆட்கள் கிடைக்கும்; ஆனால் டில்லி ஏகாதிபத்யத்தின் தலையில் தட்டிப் பேசிடும் தீரர், கிடைக்கமாட்டார்கள்; அவர்களைக் காணவும் தினமணிகளுக்குப் பிடிக்காது; திகில் அவ்வளவு!!

பிரச்சினைக்குத் தக்க பரிகாரம் வேண்டுமானால், தினமணி ஒலித்தால் போதாது, திராவிடநாடு திராவிடருக்கே என்ற இனமணி ஒலிக்கவேண்டும்.

★

# மக்கள் கரமும்



# மன்னன் சிரமும்

பிரான்சும்—பிரிட்டனும், மார்க்கத்தால் வேறு பட்டிருந்தாலும்,திருமணத்தால் நேசநாடுகளாகிவிட்டன. ஹெனிரிடாவைத் திருமணம் செய்துகொள்ளும் போது, கத்தோலிக்கருக்கு உரிமைகள் கூடுமானவரையில் வழங்குவதாக, சார்லஸ் ஒரு இரகசிய உடன்பாட்டுக்கு வந்திருந்தான். எனினும், பிரான்சு அதனைகூட அதிக மாக வலியுறுத்தவில்லை—ஆனால், பிரான்சு பிராடெஸ்ட் டென்டுகளுக்குத் துணைநிற்க வேண்டும், பிரன்ச்சு அரசுக்கு எதிராக, என்று, பக்கிங்காம் தூபமிட்டான். காரணம், மார்க்க நோக்கமல்ல என்பதை இரு நாடுகளும் பிறநாடுகளும் அறியும். பிரன்ச்சு அரசியாருடன் பக்கிங் காம் தொடர்புகொண்டான் என்பதை ஊர் பேசிச் சிரித்தது. குட்டு வெளியானதும், பிரான்சிலே அவன் தங்க அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் கோபமுண்ட காமுகன், பிராடெஸ்ட் டென்டுகளைக் காப்பதாகக் கூறிக் கொண்டு, பெரும் செலவில் கப்பற்படையைத் தானே தலைமைவகித்து நடத்திச் சென்று படுதோல்வி அடைந்து திரும்பினான். பணம் பாழாயிற்று; பகை வீணாக வளர்ந்தது, மதிப்பு மடிந்தது. மக்கள், இதனை எங்ஙனம் சகித்துக்கொள்வர். ஒரு தூர்த்தனுடைய போக்குக்கு, நாட்டுச் செல்வமும் செல்வத்தினும் சிறந்த தன்மானமும் பலியிடப்படுவதா என்று கேட்டனர்.

“நமது மதிப்பு அழிக்கப்பட்டுவிட்டது—நமது கப்பல் கள் மூழ்கடிக்கப்பட்டன—நமது மக்கள் மடிந்தார்கள்—எதிரிகளால் அல்ல, தற்செயலாக அல்ல, நாம் யாரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, அவர்களால்!” என்று ஆவேசமுறப் பேசினார், சர். எலியட் எனும் மாமன்ற உறுப்பினர். மக்கள் மனதிலே, இந்தப் பேச்சு எவ்வளவு ஆவேச உணர்ச்சியை ஊட்டியிருக்கும்! நாட்டு மக்கள் அனைவரும், என்ன எண்ணிக்கொண்டிருந்தனரோ, அதை, எலியட், மாமன்றத்திலே முழக்கமிட்டார்! தோல்வி துயர்தரத்தான் செய்கிறது. எனினும், அதன் காரணத்தை விளக்கி மக்கள் சார்பாக, முழக்கமிட, மாமன்றத்திலே வீரர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காணும்போது, துயரம் பறந்தோடுகிறது, புதியதோர் நம்பிக்கைபிறக்கிறது, என்று மக்கள் கூறிக் களித்தனர்.

சி.என்.அண்ணாதுரை.

கேவலத்துக்குரிய இந்தத் தோல்விகளைப் பெற, பெரும் பொருள் செலவிடப்பட்டது—அதைப் பெற மன்னன் கையாண்ட முறைகள், எதிர்ப் புத் தீயைக்கிளறிவிட்டது.

சரக்குகளின் மீது தீர்வை போடப்பட்டது—மாமன்ற அனுமதியின்றி. இலண்டன் நகராட்சி மன்றத்தாரை, நகரிலிருந்து 100,000 கடன் பெற்றுத்தரச் சொன்னான் மன்னன்—நகரம் மறுத்துவிட்டது—நகராட்சி மன்ற உறுப்பினரில் சிலர் 20,000 தர முன்வந்தனர்: ஐந்தில் ஒன்று கிடைக்கிறது அரசன் கேட்கும்போது! இதற்கு முன்பு இவ்விதம் நடந்ததுண்டா? எவ்வளவு தீரமாக, இலண்டன் மக்கள், மன்னன் பேச்சை ஏற்க மறுத்துவிட்டனர்! கடன்கேட்கிறான், முடிதரித்த மன்னன்—தங்களைச் சிறையிலிடவும், தூக்கிலிடவும் அதிகாரம் படைத்தவன், தேவனருளால் மன்னனானதாகப் பேசிக் கொள்பவன், எனினும், தரமுடியாது என்று தீரமாகக் கூறிவிட்டனர். இந்தத் தீரம் வளரவேண்டும்! மக்கள் மண்பொம்மைகளல்ல, தலையாட்டிகளல்ல, தன்மானம் கொண்டவர்கள், உரிமை வேட்கை மிக்கவர்கள், அவர் கள், விழித்துக்கொண்டார்கள், என்பதைத் தெளிவாகக் காட்டும் நிகழ்ச்சி இது, எனினும், வேறு எந்த முறையால் பணம் தேடுவது என்றுதான் சார்லஸ் மன்னன் யோசித் தானே தவிர, காலக் குறியைக்காணமறுத்தான், மன்னன் தன்னிடமிருந்த தங்க வெள்ளித் தட்டுகளைக்கூட விற்றான்! மன்னன் எவ்வளவு ஆதரவற்ற நிலையில் இருக்கிறான் என்பதை மக்கள் அறியலாயினர், அகமகிழ்ந் தனர்.

350,000 பவுன், கட்டாயக்கடனாகத் தந்தாகவேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தான். நெறிதவறத் தொடங்கிய மன்னன், தவறான பதையில் வேகமாகச் செல்கிறான் என்பதை இது விளக்கிற்று—கட்டாயக் கடன் என்பதற் கும் அடித்துப் பறிப்பதற்கும் சொல்லளவிலன்றி, பொரு ளில் என்ன வித்தியாசம். நீதிமன்றம், இந்த முறை சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பளித்தது! “அப்படியா! யார் அந்தத் தீர்ப்பளித்தது? சர். ரண்டால்க்ரு எனும் முதல் நீதிபதியா? சரி, அரச ஆணையை அவ மதித்த குற்றத்துக்காக, அவரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டோம்” என்றான் மன்னன். கொடுங்கோலன், காட்சி அளிக்கிறான், என்றாகிவிட்டது நிலைமை. கட்டாயக் கடனுக்கு, நாடெங்கும் பலத்த எதிர்ப்பு. படைகொண்டும், சிறையில் தள்ளியும், உருட்டியும் மிரட்டியும், கட்டாயக் கடனை வசூலித்தனர்—கண்டனம் அலை அலையாகக் கிளம் பிற்று! மன்னனை, இனி, நாடு தாங்காது, என்பது புரிய லாயிற்று. மாமன்ற உறுப்பினர்கள் மக்களிடம், நாட்டு நிலைமையையும் மக்கள் கடமையையும் எடுத்துரைத் தனர். உரிமையைப்பெற, எந்த அளவு செல்லவும் தயாராக இருப்பதை மக்கள் உணர்த்தினர்.

மன்னனுடைய சொந்த நிலங்கள் ஈடுகாட்டப்பட்டு, கடன் வாங்கப்பட்டது. நிர்வாக ஊழல், எவ்வளவு பணத்தையும் கரைத்தபடி இருந்தது. மன்னன், திகைத் தான்—ஒரு யோசனை உதித்தது. கப்பல் வரி ஒன்றை விதித்தான்.

ஆபத்து நாட்டை நோக்கி இருக்கும்போது, மன்னர்கள், முன்னுளில், துறைமுகப்பட்டணங்களில், கப்பல் வரி வசூலிப்பதுண்டு; அதைக்கொண்டு கலங்கள் கட்டி, நாட்டைக் காப்பாற்றும் நோக்குடன். சார்லஸ் மன்னன் இதைப் புதுப்பித்து, நா டு முழுவதும் 173,000 பவுன் கப்பல் வரி கட்டவேண்டும் என்று கட்டளையிட்டான்.

மாமன்றம், மன்னன் கேட்கும் பணத்தைத்தர இசையவில்லை என்றதும், இந்தவிதமாகப்பணம் 'தண்ட'த் துணிந்தது மக்களுக்கு மேலும் ஆத்திரமூட்டிற்று. மாமன்றத்திலே மக்கள் சார்பாகப் பேசுபவர்களை, ஆசை காட்டியும் அச்சமூட்டியும் மன்னன் வளைய வைக்கலாம் என்று எண்ணினுன்; ஆசைக்குச் சிலர் பலியாகிப் பதவிகள் பெற்றுப் பொதுமக்களின் வெறுப்பைப் பெற்றனர், ஆனுல் அச்சத்துக்கு ஒருவரும் ஆட்படவில்லை. அவர்கள் மனதிலே, தூய்மையான ஓர் போராட்டத்திலே இறங்குபவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் ஓர் உறுதி குடிகொண்டது. தனிப்பட்ட வாழ்விலே எத்தகைய ஆபத்துச் சூழினும் தாங்கிக்கொள்வதுதான், மக்களின் நல்வாழ்வுக்கு வகைதரும் என்ற பெருநோக்கம் கொண்டனர். அவர்களை அரசன் மிரட்டினுல், மக்கள் திரண்டெழுந்து அவர்களைக் காக்க நின்றனர். மாமன்றம் யாரோ விஷயமறிந்தவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் இடம் என்பது மாறிவிட்டது—மக்களை மதிக்க மறுக்கும் மன்னனுடன் அறப்போர் நடாத்தத் திட்டம் தீட்டும் திருச்சபை என்று மாமன்றம் கருதப்பட்டது. மக்கள் அடிக்கடி பெருவாரியாகக்கூடி, மாமன்ற வாயிலுக்கு வந்து முழக்கமிடுவதும், உரிமைக்காகப் போரிடுபவர்களைப் பாராட்டி ஆரவாரம் செய்வதும், மன்னனுக்குத் தலையாட்டிகளாகி விட்ட தர்பார் தளுக்கர்களைக் கண்டால், கண்டன முழக்கமி டு வ து ம், பழக்கமாகிவிட்டது. இரண்டிலொன்று தெரிந்துகொண்டாகவேண்டும் என்ற நிலை பிறந்துவிட்டது. இதனை அ றி யா த மன்னன், கண்களை உருட்டினுல் காரியம் நடைபெறும் என்று எண்ணினுன், தூக்குமேடை அமைக்கப்பட்டபோது கண்களைக் கசக்கியும் பலன் ஏற்படவில்லை. மக்கள் துணிந்துவிட்டனர்!

நான் அழைத்தால் கூடவேண்டும், நான் கை அசைத்தால் கலையவேண்டும், மாமன்றம் என்பது இது தான்! என்று மன்னன் பேசினுன்; தனக்காக மட்டுமல்ல, எதிர்கால மன்னர்களுக்காகவும். எனவே, மக்கள், தங்களுக்கு அப்போது ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்து கொள்வதற்காக மட்டுமல்ல, எதிர்காலச் சந்ததிகளைக் காப்பாற்றவும், வழிவகை கண்டாக வேண்டுமென்று உறுதிகொண்டனர்.

பக்கிங்காமைக் கண்டித்து எலியட், டிகிஸ், எனும் இருமாமன்ற உறுப்பினர்கள் பேசியதற்காக, மன்னன் இருவரையும், அரண்மனைச் சிறைக்கூடமான, 'டவரில்' தள்ளினுன், மாமன்றம் இந்த அக்ரமத்தைத் தாங்கிக் கொள்ள மறுத்தது! நாடு கொதித்தது, பாதகம் புரிகிருன் பக்கிங்காம், பணம் பாழாகிறது, ஊழல் நெளிகிறது, உதவாக் கரைத் திட்டமிட்டு கேவலமான தோல்வியைப் பெறுகிருன், கடல் கடந்துள்ள நாடுகளிலே பிரிட்டன் ஏளனம் செய்யப்படுகிறது, கடலிலே பிணங்கள் மிதக்கின்றன, அதனைக் கண்டித்தால் கொடுஞ்சிறையா! மாமன்றம் தன் உரிமையை இழக்க விரும்புமா? மக்கள் மாமன்றத்துக்குத் துணை நிற்கிருர்கள். மன்னன் இதன் பொருளை அ றி ந் து கொள்ளவேண்டும். இங்ஙனம் எண்ணிய மாமன்றம், எலியட், டிகிஸ் இருவரையும் விடுதலை செய்தாலொழிய, ஒரு செயலையும் செய்யப் போவதில்லை என்று கூறிவிட்டது! நாட்டின் உரிமை முழக்கக் கோட்டம், மாமன்றம். அது பணி ஏதும் செய்யமுடியாதென்று கூறிவிட்டது—மக்கள் மனநிலை என்ன ஆகும்? மன்னன் மிரண்டான், பணிந்தான். எலியட், டிகிஸ் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்; மாமன்றம் வெற்றி பெற்றது, மக்கள் உரிமைக்காகப் போரிட்ட வீரரை, நாடு வாழ்த்திற்று, புதிய வலிவு கிடைப்பதறிந்து மாமன்றம் பூரிப்படைந்தது.

மாமன்றமும் மக்களும் பூரிப்படையும் மற்றோர் சம்பவம் நடைபெற்றது. பக்கிங்காம் கொல்லப்பட்டான்.

ஒரு முறை தோற்றதால் மனம் உடையாத அந்த உல்லாச பிரபு மீண்டும் படைதிரட்டிக் கொண்டிருந்தான் பிரான்சைத் தாக்க. அதுபோது, அவனுடைய படையிலிருந்து பணியாற்றி நீக்கப்பட்ட, பெல்ட்டன் என்பவன், பக்கிங்காம், சில பிரன்ச்சுக்காரருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, மாளிகைக்கு உள்ளே செல்லும்போது, கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவிட்டான். பிரபுவின் ஆட்களில் சிலர், அவனைப் பிடிக்க ஓடினர், வேறு சிலர் அவன் வீசிவிட்டுச் சென்ற, தொப்பியைக் கண்டெடுத்தனர். அதிலே, பக்கிங்காம் நாட்டுக்குத் துரோகம் செய்தது குறித்து மாமன்றத்திலே எழுப்பட்ட கண்டனக் குறிப்புச் சில எழுதிய சீட்டுக் காணப்பட்டது. சொந்த விரோதம் காரணமாக மட்டுமல்ல, நாட்டுக்குத் துரோகம் செய்பவனைத் தீர்த்துக் கட்டவேண்டும் என்பதற்காகவும் இந்தக் கொலை, என்பதை பெல்ட்டன் அறிவிக்கவே, அவ்விதம் செய்திருந்தான்.

''யாருடைய ஏவுதலால் இவ்விதம் செய்தாய்?'' என்று விசாரணையின்போது கேட்டதற்கு, பெல்ட்டன், ''என்னை எவரும் ஏவவில்லை; நானே தான் கொன்றேன்'' என்று துணிந்து கூறினுன்.

பக்கிங்காம் கொல்லப்பட்டது கேட்டு மக்கள் ஒரு ஆறுதல் அடைந்தனர்—மன்னனைக் கெடுக்கும் மாபாவி ஒருவன் ஒழிந்தான், இனி ஒரு சமயம், நல்ல நிலைமை ஏற்படக்கூடும் என்று கூட எதிர்பார்த்தனர். ஆனுல் மன்னனுடைய போக்கை ஆராய்ந்தறிந்தவர்கள், பக்கிங்காமின் மறைவால், மன்னன் திருந்திவிடமாட்டான், மனதிலே இருக்கும் ஆபத்தான தத்துவம் அழிந்துபடவில்லையே, அது இருக்குமட்டும்,மன்னன் மக்களை விரோதியாகவே கருதி நடந்துவருவான் என்று கூறினர். மன்னனுடைய ந ட வ டி க்கை க ள் அவ்விதமே இருந்தன. மாமன்றத்தைத் துச்சமென மதித்து, கப்பல் வரி வசூலிக்கும்படி, கடுமையான உத்தரவிட்டான். மாமன்றம் தந்த ''உரிமை மனு''வை உதாசீனம் செய்தான். மாமன்றம் உறுதியுடன் இருக்கும்போது, அதன் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறிவிடுவதும், கொதிப்பு குறைந்ததும், பழையபடி பிடிவாதம் பேசுவதும் மன்னனுடைய புதிய போர்முறையாகிவிட்டது. 'உரிமை மனு'வை ஏற்றுக்கொள்வதாகக் கூறி, மாமன்றத்தினர் ஒரு மகத்தான வெற்றி பெற்றதாக எண்ணி மகிழும்போது, மன்னன், அந்த மனுவையும், அதற்கு மறுப்புரையும் சேர்த்து அச்சிட்டு மக்களுக்கு வழங்கினுன். (தொடரும்)

## அட, பாபமே!

''சோவியத் ரஷியாவின் முடிவுகள் யாவும் இரகசியமாகவே செய்யப்படுகின்றன. ஆகவே மாறுதல்கள் அறிவிக்கப்படும் தினத்துக்கு முந்தின நாள் வரையில் ஜனங்கள் பழைய கொள்கையை வேத மந்திரம்போல் 100-க்கு 100-சரியென்று உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிருர்கள்.

உலகம் முழுதுமுள்ள கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் இது பெரிய தர்மசங்கடமான திணறலுக்குக் காரணமாகிறது.

மற்றநாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளின் செல்வாக்கு முழுத் தோல்வி ஏற்படுவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணம்.

ஜனநாயக நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் இரவில் கண் உறங்கி பகலில் கண்விழிப்பதற்குள், முன்னர் சொன்னதையெல்லாம் மாற்றிக்கொண்டு, நேற்று 'நண்பர்' என்று கூறினவர்களை இன்று 'துரோகி' என்றும், நேற்று 'துரோகி' யாக இருந்தவர்களை இன்று 'நண்பர்' என்றும் சொல்லவேண்டி இருக்கிறது.''

இதுபோல கேலிசெய்கிருர், பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்களிலே ஒருவரான பெவான்.




## கோபாலர், ஜீயாகிறார்!

ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டியார், இனி, கோபால் ஜீ என்று அழைக்கப் படுவார்! அதற்கான முறையிலே அவர் காரியமாற்றி வருகிறார். ஆந்திராவில் இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிட்டார்! இந்தியைத் திணித்து, எதிர்த்தோரைச் சிறையிலிட்டு இம்சித்த ஆச்சாரியாரே, தெளிவும் துணிவும் பெற்று, இந்தி வெறியர்களைக் கண்டிக்கிறார், இந்தச் சமயத்தில், கோபால ரெட்டியார், வடநாட்டுத் தலைவர்களின் கால்வருட முன்வருவதுபோல, "நான் ஆந்திராவில் இந்தியைக் கட்டாய பாடமாக்குகிறேன்" என்று கூறி விட்டார். பல்வேறு இடங்களிலிருந்து இடிகிடைக்கும் இந்தச் சமயத்தில், கோபாலர், தழுவிக்கொள்கிறார். வடநாட்டுத் தலைவர்கள், இனி அவரை 'ஜீ'யாக்கிக் கொண்டாடத்தானேசெய்வர்! இந்தியைக் கட்டாய பாடமாக்கியது மட்டுமல்ல, சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக்கவேண்டும் என்றும் விரும்புகிறாராம், கோபாலர்! வடநாட்டுத் தலைவர்களின் மனதைக் குளிரச் செய்து, தன் அரசியல் வாழ்வில் வளம் காண எண்ணி, இந்தக் காரியம் செய்கிறார்! கோபால ரெட்டியார், இப்போது பிடித்திருக்கும் இடம், பிரகாசம், ரங்கா, சஞ்சீவிரெட்டி, போன்றாரிடம் சென்றிருக்க வேண்டியதாகும். அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. தனக்குத்தான் பட்டாபிஷேகம் நடக்கும் என்று சஞ்சீவி ரெட்டி ஆவலுடன் எண்ணிக் கொண்டிருந்தார். இப்போது ஆந்திரக் காங்கிரசிலே, பெயரளவில் ஒற்றுமை இருக்கிறதே தவிர, உள்ளூர, அங்கு மூன்று கோஷ்டிகள் உள்ளன, ஒன்றை ஒன்று கவிழ்க்க, நாளும் வழியும் தேடியவண்ணம்! கோபாலரெட்டியார் கோஷ்டி, சஞ்சீவி ரெட்டி கோஷ்டி, ரங்கா கோஷ்டி! பிரகாசம், தூங்கும் எரிமலையாகிவிட்டார்!! எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும் என்று எண்ணி, தந்திரத்திட்டம் வகுத்துக்கொண்டு தன் பதவிக்குக் கோபாலரெட்டியார் பாதுகாப்புத் தேடிக்கொள்ளவே, இந்தியைக் கட்டாயபாடமாக்கிவிட்டிருக்கிறார். இதைக்கண்டு, தன் 'பக்தி'க்கு மெச்சி, தன்னையே நிரந்தர அனுமாராக வடநாட்டுத் தலைவர்கள் அமர்த்திக்கொள்வர், ரங்காவும் சஞ்சீவிரெட்டியும் ஒதுக்கித்தள்ளப்படுவர், என்பது கோபால் ஜீயின் நம்பிக்கை.

ஆந்திர மக்களிடம், பொதுவாகவே மொழிப்பற்று உண்டு என்ற போதிலும், தெலுங்கு மொழியில், பல நூற்றாண்டுக்காலமாகவே ஏராளமான சமஸ்கிருதச் சொற்கள் புகுந்து குழைந்துவிட அவர்கள் இடமளித்துவிட்டனர்; எனவே அவர்களுக்கு, சமஸ்கிருதச் சாயலுள்ள இந்தியிடம் வெறுப்பு எழவில்லை. மேலும், ஆந்திராவில், வடநாட்டு ஆதிக்கத்துக்காகவே, இந்தி மொழி புகுத்தப்படுகிறது என்ற உண்மையை எடுத்துரைக்கும் இயக்கம் இல்லை. எனவே தான், தூங்குபவன் துடையில் கயிறு திரிப்பதுபோல, ஆந்திராவில், இந்தியைக் கட்டாயபாடமாக்க முடிகிறது, கோபால ரெட்டியாரால்.

## பாரதி!

இந்தியை இனி இந்தி என்று கூறக்கூடாது, அது பாரதி! பல வட்டாரங்களிலுள்ள மேதைகள்(!) கூடி, இந்தி மொழியைப் பாரதி என்று செல்லப்பெயரிட்டு அழைத்துள்ளனர். வடக்கே தாகூலா என்ற ஊரில், ஐம்பது எழுத்தாளர்கள் கூடி, உத்தரயன் எனும் கலைக்கழக விழா நடத்தினர் இரு கிழமைகளுக்கு முன்பு. உத்தரபிரதேச முதலமைச்சர் சம்பூர்ணானந்தர் தலைமைவகித்திருக்கிறார். அனைவரும் எதிர்ப்போரின் போக்கினைக் காரசாரமாகக் கண்டித்துவிட்டு, இந்தியை, பாரதத்தின் மொழி, பாரதி என்று செல்லப் பெயரிட்டு அழைத்துப் பாராட்டினர். இந்தியை எதிர்க்கும் ஆச்சாரியாரும் கண்டிக்கப்பட்டிருக்கிறார். ஏன், இவர்களுக்கு 'பித்தம்' இவ்வளவு என்பது பற்றி ஆச்சரியப்பட வேண்டாம்; அவர்கள் கூடிய இடம் அப்படிப்பட்டது. இந்திக்குப் புதுப் பெயரிட்டுப் பூரிப்புடன் விழா நடாத்திய இடம், அதற்குமுன், தொத்துநோய் ஆஸ்பத்ரியாக இருந்ததாம்!! அதற்கும் முன்பு, அந்த இடம் அனாதைகள் விடுதியாம்! அதைக் கட்டிய லாலா கோவிந்தலால் ஷா என்பவர் கறவை மாடுகளுக்குக் கொட்டிலாக்கி, பால் பண்ணை வைக்கும் நோக்கத்துடன் அந்த மாளிகையைக் கட்டினாராம்!! இப்போது புரிகிறதல்லவா, இடத்துக்கேற்ற இயல்பு என்ற உண்மை!!

## அசடு வழிந்திருக்கும்

"விஷமத்தனமான புகார்! உடனே இதை வாபஸ் வாங்கவேண்டும்! மன்னிப்புக் கேட்கவேண்டும்"

"நான் வாபசும் வாங்கமாட்டேன்; மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமும் இல்லை"

"புகார் கூறுவது அழகா? அதை நிரூபிக்க முடியுமா? அதை உண்மை என்று நிரூபித்துவிட்டால் நான் என் மந்திரி வேலையையே ராஜிநாமாச் செய்கிறேன்"

"நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். தக்க சமயம் வரட்டும்"

ஒருவர் அமைச்சர் — மற்றொருவர் சட்டசபை உறுப்பினர், இருவருக்கும் நடைபெற்ற உரையாடல் இது. பகிரங்கமாக நடைபெற்றிருக்கிறது.

சட்டசபை உறுப்பினர், சர்க்காரின் போக்கைக் கண்டித்திருக்கிறார்; தனிப்பட்ட ஒரு ஆசாமிக்குக் கட்டுப்பட்டு, 'கை நனைத்ததால்' சர்க்கார் தவறான போக்கிலே போய்விட்டார்கள் என்று கூறினார். ஒரு தனிப்பட்ட முதலாளி இலஞ்சம் கொடுத்துச் சர்க்காரைச் சரிப்படுத்திக்கொண்டதாகக் குற்றம் சாட்டினார்.

குற்றம் சாட்டினவர், பாபட்லா தொகுதி எம். எல். ஏ, வெங்கடராஜு என்பவர்.

குமுறி, கொதித்து, இந்தப் புகாரை வாபஸ் வாங்கவேண்டும், மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று அதிகாரக் குரலில் பேசி அச்சமூட்ட முனைந்தவர் காளா வெங்கட்ராவ் எனும் அமைச்சர்,

REGD No. 4642 திராவிடநாடு போன் நெ. 15.

கடைசிவரை, அமைச்சரின் மிரட்டலுக்கு எம். எல். ஏ. பணியவில்லை. குற்றம் குற்றமே, என்றால் ருஜுப்படுத்த முடியும் என்று முழக்கமிட்டார்.

புகார், ஒரு சிமிண்ட் தொழிற்சாலை அமைக்க, லைசென்சு தருவது பற்றியது.

குண்டூர் மாவட்டத்தின், திட்டக் கமிட்டிக் கூட்டத்தில் இந்தப் புயல் வீசிற்று, சென்ற கிழமை.

சர்க்கார் சிமிண்ட் தொழிற்சாலை அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் திடீரென்று, அந்தத் தொழிற்சாலையை நடத்த ஒரு முதலாளிக்கு லைசென்சு வழங்கப்பட்டு விட்டது.

சர்க்கார் துவக்கினால் நஷ்டம் ஏற்படும் என்று நிபுணர்கள் கூறிவிட்டனர், எனவேதான், முதலாளியை நடத்த அனுமதித்தோம் என்று அமைச்சர் விளக்கமளித்தார்.

நிபுணர் பேச்சையாவது, சர்க்கார் கேட்பதாவது, எல்லாம் 'இரகசியமாக' இரசம் கிடைத்துவிட்டது, அதனால்தான், முதலாளிக்கு யோகம்! என்று M. L. A. கூறினார்,

தனிப்பட்ட முதலாளி இலஞ்சம் கொடுத்து, சர்க்காரைச் சரிப்படுத்திவிட்டதாக அவர் ஜாடையாகப் பேசினார். அமைச்சர், அச்ச [illegible] மூட்டினால் அவர் மன்னிப்பு கேட்டுக்கொள்வார் என்று எண்ணினார். அந்த ஆசாமியோ, அசகாய சூரன்போல இருக்கிறது.

"நீகு பெப்பே! நீ தாதகு பெப்பே! (உனக்கும் பயப்படமாட்டேன், உன் பாட்டனுக்கும் பயப்படமாட்டேன்) என்று கூறிடும் போக்கினராக இருந்திருக்கிறார்; பாவம், அமைச்சர் முகத்தில் அசடு வழிந்திருக்கும்.

## நீலகண்டன்

"படமெடுத்தாடும் பாம்பு, தலையிலும், மார்பிலும், கழுத்திலும். துளியாவது அச்சம் இருக்கிறதா, பார், படத்தை, கூர்ந்து கவனித்துப்பார், சாட்சாத் சிவபெருமான் போலவே இருக்கிறதல்லவா! உண்மையைச் சொல்லிவிடுகிறேன், இவர் மகான்மட்டுமல்ல, 'சிவாம்சம்; அதனால்தான் விஷம் கக்கும் பாம்புகள், அவர் கழுத்திலும் சிரத்திலும் மாலைகளாகிவிட்டன! 'சிவாம்சம்' பொருந்தியவரின் மார்பிலே புரளும் 'பாக்யம்' கிடைத்ததேஎன்ற பெருமையினால்தான், சர்ப்பம்கூட, அவ்வளவு கெம்பீரமாகப் படமெடுத்தாடுகிறது. இந்த அவதார புருஷருடைய அருள் கிடைத்தால், அஷ்டஐஸ்வரியம் சித்தியாகும், இஷ்டம் அத்தனையும் பூர்த்தியாகும், இகபரம் இரண்டிலும் சுகம் கிடைக்கும்" இவ்வாறெல்லாம் கூறுவர், படத்தைப் பரப்புவர், சீடர்கள் இலட்சக் கணக்கில் கிடைப்பர், பெரிய மடாதிபதியாகிவிடலாம், என்றெல்லாம், மனதிலே ஆயிரம் ஆசைகள் கூத்தாடியிருக்கவேண்டும் அந்தச் சாமியாருக்கு! சாயிபாபா மடத்தைச் சார்ந்தவராம், இந்தப் பித்துக்குளி, தலையிலும், மார்பிலும், கழுத்திலும், பாம்புகளைப் போட்டுக்கொண்டு 'போட்டோ' எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டு, பாம்புப் பிடாரனிடமிருந்து எட்டணா செலவில் பாம்புகளைப் பெற்று, சிவனார் போன்ற கோலத்தில் போட்டோ எடுத்துக்கொள்ள முனைந்தார். இந்தப் பைத்யக்காரனின் ஆசைக்கு நாம் குறுக்கே நிற்பானேன் என்றுபோலும், பாம்பு, ஏதும் செய்யாது இருந்தது. இதுசாயிபாபாச் சாமியாருக்குப் பிடிக்கவில்லை. பாம்புபடமெடுத்தாடவேண்டும், அந்த நிலையில் போட்டோ எடுத்தால்தான், பரமசிவன்போல இருக்கும் என்று கருதி,பாம்பைச் சேஷ்டை செய்தார்–தொல்லை தாங்காமல், பாம்பு பல்லை வைத்து அழுத்திற்று, சாமியார் பயப்படவில்லை. ஆலகால விஷத்தை அள்ளிக் குடித்தும், கண்டத்தோடு நின்றுவிடவில்லையா, சிவனாருக்கு—நீலகண்டன் என்ற பெயர் கிடைத்ததல்லவா! அப்படிப்பட்ட சிவனாரின் கோலத்தில் இருக்கும் தமக்குப் பாம்பு தீண்டினால்; ஆபத்து இராது என்ற தைரியம் அல்ல — பாம்புப் பிடாரன் சொல்லிவைத்தான், விஷப்பல்லைப் பிடுங்கிவிட்டேன், கடித்தால் ஆபத்து இல்லை, என்று. இதை நம்பித் தைரியமாக இருந்தான் தெளிவிழந்த அந்த பிக்ஷாந்தேஹி! விஷமோ வேலைசெய்யத் தொடங்கிவிட்டது — மயக்கம் மேலிட்டது—வாயில் நொப்பும் நுரையும் தள்ளிற்று—கீழே சாய்ந்தான்—சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்—பலன் இல்லை — பிணமானான்!! பெயர் நிங்கப்பா—சம்பவம் நடைபெற்றது, வடநாட்டில். ஒருவருஷத்துக்கு முன்பு பாம்பின் விஷப்பல்லை அகற்றினேன், என்று பாம்புப் பிடாரன் சாதிக்கிறான். சாமியாரோ 'அரோகரா' ஆகிவிட்டார். சாமியார்களுக்கு ஆசை எப்படி எப்படிப்போகிறது பார்த்தீர்களா! பரமசிவன் போல இருக்க வேண்டுமாம் போட்டோவில், பாம்புகளை ஆபரணமாகக் கொண்ட கோலத்தில்! ஏன்? பாமர மக்கள் மயக்கமடைய!! எப்படிப்பட்ட மகான்இவர், பாம்புகளை மாலைபோலப் போட்டுக்கொண்டிருக்கிறார் என்று வியந்து கூறுவர், பிறகு, காணிக்கை குவியுமல்லவா!! வியாபார தந்திரம்!!

## பேய், ஓடவில்லை!

பேய்கள், துஷ்ட தேவதைகள், இவைகளே பூலோகத்திலே ஏற்படும் பலவகையான ஆபத்துகள், அவதிகள் ஆகியவற்றுக்குக் காரணம் என்று நம்புவோரின் தொகை ஏராளம், பக்தர்களிடையில். இந்த நம்பிக்கையினால், துஷ்ட தேவதைகளைத் திருப்திசெய்யும் பூஜைகள், விரட்டும் சடங்குகள் ஏற்பட்டன. இன்றும் இவை நடைபெறுகின்றன. பீகார் ராஜ்யத்து ஆதிவாசிகள், ர ா ஞ் ச் சி என்ற ஊருக்கருகில், சின்னாட்களுக்கு முன்பு, ஆபாசமாக நடந்துகொண்டு, கலாம் விளைவித்தனர் என்பதற்காகச் சிறையில் தள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்கள் செய்தது, பேய் ஓட்டும் சடங்குதான்! நிர்வாணமாக ஒரு கும்பல் கிளம்பி, காகூவெனக் கூவிக்கொண்டு, கண்டபடி ஏசிக்கொண்டு, எதிரே வருவோர் போவோரைத் தாக்கினராம்! இதுபோலச் செய்தால், பேய்பிசாசுகள் விரண்டோடிவிடும் என்பது அவர்கள் நம்பிக்கை. இவர்களில் 28-பேர் இப்போது போலீசால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட ஆபாசக் காரியத்தையா மதம் என்று ஆதிவாசிகள் நம்புகிறார்கள், மூட பக்தியல்லவா இது என்று கேட்கத்தோன்றும், இங்கு உள்ளவர்களுக்கு; ஆனால் இங்கே நடைபெறும் காரியம் இதைவிடக்குறைந்த அளவா என்று கேட்டால் கோபம் வரும். கங்கம்மா திருவிழா, மாரியம்மன் திருவிழா, அல்லாசாமி பண்டிகை, என்பனபோன்ற பெயரால், எவ்வளவு கோரமான வேஷங்கள், கோணங்கி ஆட்டங்கள், காட்டுக் கூச்சல், கலகம், நடைபெறுகின்றன. இதுகளெல்லாமா மதம், என்று கேட்கிறார்கள் பெரியவர்கள் — ஆனால் யார் தடுத்தார்கள், திருத்தினார்கள்? இப்போதும் நடைபெற்றுவருகிறது. ஆதிவாசிகள் பேய் ஓட்டக் கிளம்பினர்— பேய் ஓடவில்லை — போலீஸ் துரத்தியதால் அவர்கள்தான் ஓடினர்! இங்கு துணிந்து சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

Edited, Printed & Published by C N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.